# இந்துசாதனம்

SUPPLEMENT TO THE HINDU ORGAN.

சோமவாரத்திலும், குருவாரத்திலும் பிரசுரமாகும்.

புத்தகம்—சஅ } யாழ்ப்பாணம்:— தாதுஹு சித்திரைமீ உருவ (1936 மே 7) வியாழக்கிழமை { இலக்கம்—அ


# சிவபிரான் திருவடி பற்றிய திலகவதியார்

## இடுக்கண்மேல் இடுக்கண் வந்தும் இறைவனை மறவாத ஏந்திழையார்

### உற்ற விடத்தில் அப்பர்சுவாமிகளுக்கு உய்யும்நெறி காட்டியருளிய உத்தமச் செல்வி

திருமுனைப்பாடி நாட்டிலே வேளாளர் குலத்திலே, குறுக்கையர் குடியிலே புகழனார் என்பவர் ஒருவரிருந்தார். அவர் மாதினியாரை மணம் புரிந்து அன்பும் அறனுமுடையராய் இல்வாழ்க்கை இனிது நடாத்தினார். அவருக்கு மாதினியாரின் மணிவயிற்றில் திலகவதியார் என்னும் திருமகளும் மருள் நீக்கியார் என்னும் திருமகனும் பிறந்தார்கள். திலகவதியார் இளமையிற் கலைபல பயின்று பன்னிராட்டைப் பிராயத்தளாயினர். மணப்பருவம் வந்தெய்தக் குலமும் குடிமையும் குன்றா இனமும் தானடி அன்பும் உடைய கலிப்பகையாருக்கு அவரை மணஞ்செய்யப் பெற்றோர் தீர்மானித்தனர். எண்ணிய மணம் முடிவுறுமுன் தானைத்தலைவராகிய கலிப்பகையார் அரசன் ஆணை தாங்கி அமர்செல்ல நேர்ந்தது.

இஃதிவ்வாறாகப் புகழனார் நோயுற்றுப் பூதவுடம்பு நீத்துப் புகழுடம்பு பெற்றார். அவரது மனைவியாராம் மாதினியாரும் கொழுநன் இறந்ததும் சுற்றமும் மக்களும் முற்றத் துறந்தும் கற்புநெறி வழுவாமற் கணவனுடன் சென்றார். தந்தை தாய் தலைப்பிரிந்த மக்களிருவரும் ஆற்றற்கரிய வருத்தமுற்றுப் பின் சுற்றந் தேற்ற ஒருவாறு தேறியிருந்தார். இருசருநாளில் பின்னும் இடுக்கண் இடையறாது வந்தது. கலிப்பகையார் போரில் மடிந்து புகழ்பெற்றார் இதை அறிந்த திலகவதியார் தனக்கெனத் தந்தையால் தீர்மானிக்கப் பெற்ற தலைவன் இறந்தபின் உயிர் வாழாது இறக்க எண்ணினார். மருள் நீக்கியார் இவ்வெண்ணத்தை அறிந்து தமக்கையை அடைந்து புலம்பி வணங்கி, 'தந்தை தாய் நீத்த பின் யனேன் நும்மால் உயிர் வாழ்கின்றேன். நீர் உயிர் துறப்பீராயின் நான் முதலில் நுமக்கு முன் இறப்பேன்' என்றார். இதைக்கேட்ட திலகவதியார் தம்பியார் மீது அன்பு காரணமாக உயிர்வாழ இசைந்தனர்.

திலகவதியாரும் மருணீக்கியாரும் நிலையாமை யுணர்ந்து தமது செல்வத்தால் அறங்கள் பல செய்தனர். மருணீக்கியார் சமண்சமயஞ் சேர்ந்து அச்சமயத்திற் றலைசிறந்து விளங்கினர். திலகவதியாரோ செந்நெறியாம் சிவநெறி நின்று, பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்பால் ஆரா அன்பினராய்த் திருவதிகை சென்று வீரட்டானேசுரருக்குத் திருத்தொண்டு புரிவாராயினர். அவர் நாடோறும் புலருமுன் னெழுந்து புனித நீராடி, திருநீறணிந்து சிவசின்னங்கள் தாங்கி, திருக்கோயில் சென்று திருவலகிட்டு, ஆவின் சாணத்தால் அழகுபெற மெழுகி, நந்தவனஞ் சென்று நறுமலர் கொய்து மாலைகள் தொடுத்து மற்றும் பணிபல புரிந்து வந்தார். இவ்வாறு திருத்தொண்டு செவ்விதிற் புரியுந் திலகவதியார்க்கு மனக்கவலை ஒன்று மாறாதிருந்தது அஃதென்னெனின் தனது தம்பியார் பரசமயப் படுகுழியில் வீழ்ந்து விட்டாரே, அவரை எவ்வாறு சைவநெறி சேர்ப்பது என்பதேயாம். மனக்கவலை மாற்ற வல்லார் தனக்கு வேறு யில்லாராகிய வீரட்டானேசுரர் என்று கருதி, அவரிடத்து நாடோறும் தனது குறையை முறையிட்டு வந்தார். அடியார் துயர் களையும் அண்ணலார் அம்மையார்க்குக் கனவிற் றோன்றி 'நினது தம்பியைச் சூலை நோயால் ஆட்கொள்வோம்' என்று அருளிச் செய்தார். அவ்வாறே மருணீக்கியாரும் துன்பமிகு சூலையுறுத் துயருழந்தார். அதனைத் தணிக்கும் வழி யறியாராய்ச் சங்கடமுற்றுத் தமக்கைக்குத் தன் வருத்தத்தைத் தெரிவிக்கப் பணியாளனை அனுப்பினார். பணியாளன் திருவதிகை சென்று திலகவதியாரிடம் அதனைத் தெரிவிக்க, அம்மையார் கண்ணுதலடியாரல்லாரைக் காண்டற்கும் அஞ்சுவாராகலின் 'அங்கு வரேன்' என மொழிந்தார். இம்மொழியை அவன் மருணீக்கியாரிடத்திற் சென்று சொல்லவும் அவர் கேட்டு மனந்தளர்ந்து செய்வதின்னதென் றறியாது சமண் சமய நீத்து தமக்கை தாளடையத் துணிந்தார். அவ்வாறே திலகவதியாரை அடைந்து வணங்கித் தனது சூலை நோயின் கொடுமையைச் சொல்லித் தனக்கு அதினின்று கரையேறு நெறியுரைத்தருள வேண்டும் என்று பணிந்தார். திலகவதியார் அந்நோயின் காரணமறிந்தாராகலின் அதைத் தணிக்கும் வழியும் அறிந்தார். அவர் தனது தம்பியாரை நோக்கி 'பரசமயப் படுகுழியில் விழுந்திருந்தல் துயருழந்தீர், பரமசிவனைப் பணி செய்வீராயின் நோய்தீரும்', என்றருளினார். அப்பணியை ஏற்றுக்கொண்ட மருணீக்கியார்க்கு அம்மையார் சிவனருள் நினைந்து திருவைந்தெழுத்தோதித் திருநீறு கொடுத்து அவரைத் திருக்கோயிலுக்கு அழைத்துச் சென்றார்.

"திருவாளன் திருநீறு திலகவதியார் அளிப்பப் பெருவாழ்வு வந்ததெனப் பெருந்தகையார் [பணிந்தேற்றங்கு உருவாரவணிந்து தமக்குற்றவிடத் துய்யுநெறி தருவாராய்த் தம்முன்பு வந்தார்பின் தாம்வந்தார்."

திருவரிசிற்கரைப் புத்தூர் பண்-இந்தளம்

அருமலரோன்சிர மொன்றறுத்தீர்
செறுத்தீர் அழற்கு லத்தில் அந்தகனைத்
திருமகள் கோன்நெடு மால்பலநாள் சிறப்
பியபூ சனைசெய் பொழுதில் [பா
ஒருமல ராயிரத் திற்குறை வாக்நிறை
வாகவோர் கண்மலர் சூட்டலுமே
பொருவிற லாழி புரிந்தளித் தீர்பொழி
லார்திருப் புத்தூர்ப் புனிதனீரே

## கஞ்சாவைத் திருந்தோனுக்குக் 'கடுங்காவல்'

கொழும்பு, மே 4உ

இன்று கொழும்புப் பொலிஸ் கோட்டில, யாழ்ப்பாணம் இளவாலையைச் சேர்ந்த அந்தோனி என்னும் ஒருவன் மீது ஒரு கஞ்சா வழக்குத் தொடரப்பட்டது. எதிரி மீது வழக்குத் தொடர்ந்த பொலிஸ் பொலிஸைச் சேர்ந்த சார்ஜன் முதியான்சே என்பவர் தான் சந்தேகத்தின் பேரில் எதிரியைச் சோதித்த போது எதிரி ஒரு கஞ்சாப் பொட்டணத்தை வைத்திருக்கக் காணப்பட்டான் எனக் கூறினார். விசாரணையின்பின், நீதிபதி எதிரியைக் குற்றவாளியெனக் கண்டு எதிரிக்கு ஒரு வருஷக் கடுங்காவற் றண்டனை விதித்தார்.

—

## மரத்திலிருந்து விழுந்ததால் மரணம்.

தங்காலை, ஞாயிறு

இங்கு வாவா என்னும் கிராமத்தில் பதினைந்து வயதுள்ள ஒரு சிங்களச் சிறுவன் பலாமரத்தில் ஏறிய போது தவறி விழுந்து பலத்த காயமடைந்து வாயாலும் மூக்காலும் இரத்தஞ்சிந்தி மரணமடைந்தான்.

மரணவிசாரணைக்காரர், இம்மரணத்தைக்குறித்து விசாரித்தபின், மரணம் தற்செயலாக ஏற்பட்டதென்று அறிக்கைசெய்துள்ளார்.

---

திருக்கோயில் சென்று வலம் வந்து வீரட்டானரை இறைஞ்சவும் தம்பிரான் திருவருள் கூடினதால் தமிழ்மாலை பாடலுற்றார் நமது அப்பர். அவருக்குச் சூலை நோயுடன் பிறவி நோயுந் தொலைந்தது திலகவதியார் திருத்தொண்டு புரிந்து சிலகாலந் தங்கிச் சிவனடி சேர்ந்தார்.

அம்மையாரது கற்பும், தவாவின்மையும், அன்பும், சிவபத்தியும், திருத்தொண்டின் திறமும் யாவராலும் போற்றத்தக்கன. அவருக்குத் தனது தம்பியாரை நன்னெறி சேர்க்க வேண்டுமென்ற ஓர் விருப்பந்தானிருந்தது. அவ்வாறே நாமும் நமது சுற்றத்தாரையும் நண்பரையும் நாமது சைவசமயத்தில் நிலைநிற்கச்செய்ய வேண்டியதே நமது முதற் கடமையாகக் கொள்ளவேண்டும். திலகவதியாராலேயன்றோ நமது அப்பர் சுவாமிகள் இருள் நீங்கி இன்பம் அடைந்தார்.

'கல்லதிலகவதியார் மொழியைக் கேட்டுக்கோய் சொல்லரசர் தீர்ந்துய்ந்தார் சோமேசா-புல்லிய நோய்நாடி நோய்முதல் நாடி யதுதணிக்கும் வாய்நாடி வாய்ப்பச் செயல்.'

# செந்தமிழ் நூல்கள் கூறும் ஐந்திணை அமுதம்

## கலைமகள் என்னும் சஞ்சிகையில் வித்துவான் இராசமாணிக்கம் எழுதியது

### களவும் கற்பும்; தலைவன் பிரிவும் தலைவி ஆற்றியிருத்தலும்

ஐந்திணையாவன குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்பன. இவை மலைநாடு, பாலைநிலம், காட்டு நிலம், வயல்வளம், கடற்கரை என 'நிலவகை' யாகவும், புணர்ச்சி, பிரிதல், இருத்தல், ஊடல், புலம்பல் என 'ஒழுக்கவகை' யாகவும் அகப்பொருளில் முறையே பொருள் படும். குறிஞ்சி நிலத்தில் புணர்ச்சி (களவு) நிகழும்; என்றால், ஏனை நிலங்களில் அது நிகழாதெனல் பொருளன்று; கருத்து மன்று புலவர்கள் பழந் தமிழர் வாழ்க்கையைச் சித்திரித்துக் காட்டப் பல காட்சிகளை அமைத்தனர். அக்காட்சிகளே மேற்கூறிய குறிஞ்சி முதலியன. மிகப் பழைய காலத்தில் தமிழர் கையாண்டுவந்த 'மண முறை இன்னது' என்பதை அறிவித்தற்கே புலவர் அகப்பொருளை ஓர் ஓவியமாகச் சித்திரித்துக் கூறுகின்றனர். இவ்வகப்பொருட்-களவு தலைவன், தலைவி, பாங்கி, பாங்கன் என்னும் நால்வர் வயப்பட்டிருக்கும் போது 'களவு' எனப்படும். இது தலைவியின் பெற்றோர்க்கு அறிவிக்கப்பட்டுப் பின் தலைவனும் தலைவியும் பலர் அறிய இல்வாழ்க்கை நடத்துவாராயின், அம்முறை 'கற்பு' எனப்படும். தலைவன் தலைவியை நடத்தும் ஒழுகலாறும், தலைவி தலைவனை நடத்தும் ஒழுகலாறும் கற்பிக்கப்படுதலின் 'கற்பு' எனப் பெயர் பெற்றது. (ஆனால், துரதிஷ்டவசமாகப் பின் நாட்களில் 'கற்பு' என்பது 'பாதிவ்ரத்யம்' என்னும் பொருளில் வழங்கலாயிற்று.) இதனைத் தொல்காப்பியர் 'இலக்கண நூல்' செய்த முறையில் "கரணமொடு புணர்த்த மணம் கற்பு-கரணமின்றியும் கற்புநிகழும்" எனக் கூறிப் போந்தனர்.

எனவே, 'கரணம்' என்பது 'சடங்கு' என்னும் பொருளில் வருவது. சடங்காவது பலர் அறியப் பெருவிருந்து நடத்தி, 'இவனும் இவளும் அன்பொத்த வாழ்க்கையை நடத்த இசைந்த கிழவனும் கிழத்தியும் ஆவர்' எனப் பலர் அறிய மணமக்கள் இல்லறத்தை மேற்கொள்ளத் தொடங்கும் தொடக்கம் என்பதுதான் அப்பழங்கால நிகழ்ச்சிகளை ஆராய்ந்த ஆன்ற அறிவுடையோர் கொள்ளத்தக்கது இஃதன்றி நச்சினார்க்கினியர் கூறுமாறு அங்கியங் கடவுள் சான்றாக நடக்கும் வைபவங்கள் தொல்காப்பியர் காலத்தனவும் அல்ல என்பது நூலறிவோடு இயற்கையறிவும் உடையோர்க்கு ஒப்ப முடிந்த தொன்றாகும்.

நச்சினார்க்கினியர் காலத்துக்கும் தொல்காப்பியர் காலத்துக்கும் இடையே எத்தனை ஆயிரம் ஆண்டுகள் கழிந்தன என்பது அறுதியிட்டுக்கூற இயலாததொன்று. நச்சினார்க்கினியர் தம் காலத்தனவாகிய பழக்க வழக்கங்களையே பழைய காலத் தொல்காப்பியச் சூத்திரங்கட்கு உரையாகவும் விரியாகவும் கூறிச் செல்கின்றார் என்பதைப் பல இடங்களில் அவர் உரைகளே ஒப்புகின்றன. இளம்பூரணர் உரையும் சில இடங்களில் இடர்ப்படுதல் காணலாம். எனவே, உரைகளைக் கருதாது அப்புறப்படுத்தித் தொல்காப்பியத்தை; இயன்ற அளவு நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு கலித்தொகை, அகநானூறு என்னும் இந்த ஐந்து நூல்களில் உள்ள மிகப் பழையகாலப் பாடல்களையும் குறளையும் வைத்துக்கொண்டு, ஆராய்ச்சி செய்யின், தொல்காப்பியச் சூத்திரங்கட்கு ஒருவாறு 'உண்மை உரை' காணலாகும். எங்ஙனமெனில், இவை, ஏறக்குறைய, தொல்காப்பியர் காலத்துக்குச் சிறிது பிற்பட்டவை ஆகலாம் என்பது ஆன்ற அறிஞர் கண்டறிந்த முடிபாகும்; ஆகவே, சூத்திரங்களையும இலக்கியப் பழைய பாக்களையும் துருவிப் பொருள் காணின், பல சூத்திரங்கட்கு உண்மைப் பொருள் கிடைக்கலாகும்.

### குறிஞ்சி நிலக் கூட்டுறவு

ஒருவனும் ஒருத்தியும் முதன் முறை ஒருவரை ஒருவர் கண்டஞான்றே கொள்ளும் அன்பும், அவ்வன்பின் பெருக்கால் உண்டாகும் கூட்டுறவும். அக்கூட்டுறவு பலநாள் தொடர்புற்றுக் களவில் (பிறர் அறியாமல்) நடப்பதும் 'களவு' எனப்படும். இதனைக் குறிஞ்சிநில ஒழுகலாறாக முன்னையோர் வகுத்தனர். தலைவனும் தலைவியும் ('இருவருமாறிப் புக்கது மெய்தினார்' என்பது கம்பர் கூற்று) உயிர் ஒன்றும் உடல் இரண்டுமாகக் களவில் வதிவர் தலைவிக்கும் தலைவனுக்கும் முன்னர் ஒருவித சம்பந்தமுமில்லை; அவன் பெற்றோர்க்கும் அவள் பெற்றோர்க்கும் எட்டுணையும் சம்பந்தம் இல்லை; ஒருவரை ஒருவர் பார்த்தும் அறியார். இந்த நிலையில் 'இருவர் தம் உள்ளமும் ஒன்றுபின.' இதுவே 'குறிஞ்சி நிலக் கூட்டுறவு,' இதனை,

தொடர்ச்சி 6-ம் பக்கம்.

## பாலர் பகுதி

# தாயின் சொல்

அருமை மருமக்காள்

நீங்கள் எப்போதாயினும் உங்களைப் பெற்ற தாயாரின் சொல்லைத் தட்டி நடப்பதுண்டா? நல்ல மருமக்களாதலின் அப்படிச் செய்யமாட்டீர்களென்றுதான் நான் நினைக்கிறேன்; பெற்ற தாயின் சொல்லைத் தட்டாது கேட்டு நடப்பதனால் அதிக நன்மையுண்டு; இதற்கு உதாரணமாக, கீழே ஒரு கதை வரைகிறேன்; படித்துப் பார்த்து, தாய் புத்தி கேட்டு நடவுங்கள்:

ஒரு சிறுவன் தன் தாயிடம் போய் "அம்மே, என் உபாத்தியாயர் சொற்படி அவருடைய கருமமாக அடுத்த ஊருக்குப் போய் வரவேண்டி ஏற்பட்டிருக்கிறது; அப்படிப் போய்வருவதற்கு உத்தரவு கொடுக்க வேண்டும்" என்று தன் தாயைக் கேட்டான். அதனைக் கேட்ட அன்னை, "அப்பா மகனே, 'துணையோடல்லது தனிவழி ஏகேல்' என்று நீ படிக்கும் படிப்பிலே சொல்லப் பட்டிருக்கிறது; ஆனதால் தன்னந்தனியே போகாதே; நான் உனக்கு ஒரு வழித்துணை தேடித் தருகிறேன்" என்று சொல்லிவிட்டு, தங்கள் கிணற்றுள் வசிக்கும் ஒரு நண்டைப் பிடித்துத் தண்ணீர் உள்ள ஒரு கலயத்துள் இட்டு, கலயத்தின் வாயைத் துணியினால் மூடிக் கட்டி "குழந்தாய் இதனை வழித்துணையாகக் கொண்டுபோ" என்று சொல்லிக் கொடுத்தாள். சிறுவனும் தாய் கொடுத்த வழித்துணையை இரண்டு கைகளையும் நீட்டி வாங்கிக் கொண்டு போனான். போகும் மார்க்கத்தில் வெய்யில் ஏறிவிட, அந்தப் பையன் வழியோரத்தில் நிற்கும் ஒரு பெரிய ஆலமர நிழலை அடைந்து கலயத்தைப் பக்கத்தில் வைத்துவிட்டு, தன் ஆயாசந் தீரப் படுத்துச் சிறிது நேரம் உறங்கிவிட்டான்.

இப்படி அவன் உறங்கும் போது, அந்த ஆலமரப் பொந்தில் உள்ள ஒரு நாக பாம்பு நகர்ந்து கலயத்திற்குச் சமீபமாக வந்து அதற்குள் தவளை இருத்தல்கூடுமென்று நினைத்துப்போலும் மேலே கட்டியிருந்த துணியைப் போழ்த்துத் தலையை உள்ளே செல்ல விட, கலயத்துள் இருந்த நண்டு தன் கொடுக்குகளினால் பாம்பின் தலையைக் கறித்துவிட, பாம்பு உடனே செத்துப் போய்விட்டது. இதன்பின் உறங்கிய சிறுவன் உறக்கம் நீங்கி எழுந்து பார்த்தான் கரும்பாம்பொன்று செத்துக் கிடப்பதைக் கண்டான்; நண்டுதான் அதைச் சாவச் செய்ததென்று யூகித் தறிந்து கொண்டான். அந்தப் பாம்பை முந்தியே நண்டு கடித்துக் கொன்றிருக்காவிட்டால், அது தன்னைக் கடிக்கத் தான் இறந்துபோகவேண்டி நேர்ந்திருக்குமே என்று நினைத்தான்; தன் தாயின் புத்தியைப் பாராட்டினான்; தன் உயிரைக் காத்த நண்டைக் கலயத்துடன் எடுத்துக் கொண்டு



போய், உபாத்தியாயர் சொன்ன கருமத்தையும் முடித்துவிட்டு மீண்டு தன் வீட்டிற்கு வந்து, வழியில் நடந்த செய்தியை எல்லாம் தாயிடஞ் சொல்லி அவளை விழுந்து கும்பிட்டான்; பெற்றவள் தன் குழந்தையை அணைத் தெடுத்து முத்தமிட்டு, கடவுள் செய்த நன்மையை எண்ணிக் கும்பிட்டாள். ஆனதால், அரிய மருகர்காள்! ஒருபோதும் உங்கள் தாயார் சொல்லைத் தட்டாதிர்கள்.

எனது மருமக்களே, இந்தமுறையும் உங்களை ஒரு கேள்வி கேட்கிறேன். நீங்களாகவே உங்கள் புத்தியைக்கொண்டு நன்றாய் யோசித்து இதற்குச் சரியான விடை ஒரு போஸ்காட்டில் எழுதி அடுத்த புதன் கிழமைக்கு முன் என்னிடஞ் சேரத்தக்கதாய் அனுப்பி வையுங்கள்

ஒரு தோணித்துறையின் இக்கரையிலுள்ளவன், ஒரு ஆட்டையும் ஒநாயையும் கீரைப்பிடியையும் ஓடத்தில் ஏற்றி அக்கரையிலே கொண்டுபோய்ச் சேர்க்க வேண்டியிருந்தது. அவனுக்கு அகப்பட்ட ஓடம் சிறியதாய் இருந்தமையினால் அவன் அம்மூன்று பொருள்களுள் ஒன்றைத்தான் ஒரு முறை ஏற்றிக்கொண்டு போய் அக்கரையிற் சேர்க்க வேண்டும். அவைகளில் இரண்டையேனும் ஒரே முறையிற் கொண்டுபோக ஓடக்காரன் விடமாட்டான்.

(1) ஓநாயையும் ஆட்டையும் இக்கரையில் விட்டுவிட்டுக் கீரையை மாத்திரம் அக்கரைக்குக் கொண்டு போனால், ஓநாய் ஆட்டைப்பிடித்துத் தின்றுவிடும். (2) ஆட்டையும் கீரையையும் இக்கரையில் விட்டு ஓநாயை மாத்திரம் அக்கரைக்குக் கொண்டுபோனால் ஆடு கீரையைத் தின்றுவிடும். (3) ஓநாயையும் கீரையையும் இக்கரையில் விட்டு ஆட்டை மாத்திரம் அக்கரையிற் கொண்டு போய் விட்டு, அவன் மீண்டு வந்து ஓநாயையேனும் கீரையையேனும் அக்கரையிற் கொண்டுபோய்ச் சேர்க்கலாமென்றால், ஓநாயை அக்கரையில் விட்டு அவன் மீண்டு கீரையை எடுக்க வருவதற்கிடையில் ஓநாய் ஆட்டைக் கொன்று தின்றுவிடும். கீரையைக் கொண்டுபோய் அக்கரையிற் சேர்த்துவிட்டு அவன் மீண்டு ஓநாயைக் கொண்டுபோக இக்கரைக்கு வரின், இதற்கிடையில் ஆடு கீரையைத் தின்றுவிடும்.

இப்படியெல்லாமிருப்பதால் அவன் அந்த மூன்றையும் தனித்தனி அக்கரையிற் கொண்டுபோய்ச் சேர்ப்பதற்கு ஒரு உபாயத்தை யோசித்து எழுதுங்கள் பார்ப்போம்?

உங்கள் சுப்புமாமா.

## விநோதக் கொத்து

### தவளைப் பண்ணை.

அமெரிக்காவில் தவளையின் கால்களுக்கு அதிககிராக்கி ஏற்பட்டிருக்கிறது. நியூ ஆர்லியான்ஸ் லூஸியானு சதுப்பு நிலங்களில் தவளைப்பண்ணை மிகவும் லாபகரமாக நடந்து வருகிறது. தவளைப் பண்ணை முதலாளிகள் பலர் இரண்டொரு வருஷங்களில் தவளைப் பிரபுக்களாகிவிட்டார்கள். ஒரு கொழுத்ததவளை சாதாரணமாக 2 ஷில்லிங் 6 பென்ஸிற்கு விலையாகிறது. ஒரு சோடி தவளை பிரதி வருஷம் சாராசரி 10000 தவளைக் குஞ்சுகளைப் பொரிக்கின்றன வென்று தெரிகிறது. தவளைக் குஞ்சுகளைப் பண்ணையில் விசேஷ கவனத்துடன் பராமரித்து வருவதால், குஞ்சுகளிடையே மரண விகிதம் குறைவாகவே இருக்கிறது. எனவே வருஷமொன்றுக்கு ஒரு சோடி தவளை மூலம் 1000 பவுன் வருமானம் கிடைக்கிறதாம். அமெரிக்க ஹோட்டல்களில் தவளைக் கால் பொரியல் மிகவும் உயர்ந்த பலகாரம். 2 கால்களுக்கு 6 ஷில்லிங் சுமார் ரூ. 3½ கொடுத்து அப்பலகாரம் வாங்கி சாப்பிடுகிறார்கள். இந்தியாவில் கிராமக் கொல்லைகளில் மண்டிக்கிடக்கும் தவளைகளைப் பிடித்து அமெரிக்காவுக்கும் பாரிஸுக்கும் அனுப்ப ஓர் வெள்ளையர் கம்பெனி ஏற்பாடு செய்து வருவதாகத் தெரிகிறது.

### மாயக் கண்ணாடி

ஒரு அடி தூரத்திலுள்ள சாமான்களும் கண்ணுக்குத் தெரியாதபடி மூடுபனி சமுத்திரங்களில் சூழ்ந்துகொள்வது சகஜம். இதனால் எவ்வளவோ கப்பல் விபத்துகளேற்பட்டிருக்கின்றன; இன்னும் ஏற்பட்டு வருகின்றன. மூடுபனியினால் இங்கிலீஷ் கப்பல்களுக்கு வருஷத்தில் 70 லக்ஷம் பவுன் நஷ்டமேற்பட்டு வருகிறது. எவ்வித மூடுபனியிலும் தெளிவாகப் பார்க்க 20 வயதுள்ள டாக்டர் எரிக்ரிக்பி ஓர் நவீன கண்ணாடியைக் கண்டுபிடித்திருக்கிறார். நிற்க, விமானிகள் உயர ஆகாயத்திற் பறந்து செல்கையில் மூடுபனியால் ஒன்றுமே தெரியாமல் கஷ்டப்படுகிறார்கள். விமானிகளுக்கு இப்புதிய கண்ணாடி பேருதவியாக இருக்குமென்பதில் சந்தேகமில்லை.

டாக்டர் ரிக்பி பல வருஷகாலம் பூனைக்கண்ணைப் பரிசீலனை செய்து ஆராய்ச்சிகள் நடத்திவந்தார். ஏற்கனவே தமது மின்சாரகண்ணாடிக்கு 4000 வோல்ட் சக்திகளை உபயோகித்துவந்தார். இப்போது 500 வோல்டுகளைக்கொண்டே அக்கண்ணாடியை உபயோகிக்குமாறு செய்துள்ளார். இம்மெஷின் 2 அடி சதுரமுள்ள ஓர் பெட்டிக்குள் வைக்கப்பட்டுள்ளது. அப்பெட்டியிலிருந்து மின்சார சக்தியால் சாதாரணவெளிச்சம் 3 கோடி பங்கு அதிக பிரகாசமாக வெளியேயுள்ள ஓர் திரைமீது படுகிறது. திரையின் மறுபக்கத்தில் மூடுபனியில் மறைந்துள்ளவைகளும் நன்றாகத் தெரிகிறது.

### விமான ஆகர்ஷணி

அனுமார் இலங்கைக்குச் செல்ல சமுத்திரத்தைக் கடந்து செல்லும்போது வழியில் ஓர் தீவில் வசித்துவந்த ஓர் ராக்ஷஸி, நிழல் மூலம் அனுமாரைக் கீழே விழுத்திவிட்டதாகக் கிழவிகள் சொல்லக் கேட்டிருக்கலாம். அதைப்போல, பிரிட்டனில் சத்துருக்களின் விமானங்கள் வெடிகுண்டுகளை வீசவந்தால் அவைகளைக் கீழே இழுத்துவிட சர் ரோஜர் கேஸ் ஓர் புதிய முறையைக் கண்டுபிடித்திருக்கிறார். இப் புதிய பாதுகாப்பு முறையை இராஜாங்க நிபுணர்களும், விமானப் படை அதிகாரிகளும் இப்போது பரீட்சை பார்த்துவருகிறார்கள்.

பிரிட்டிஷ் தீவைச் சுற்றி கண்ணுக்குப் புலப்படாத ஓர் பாதுகாப்பு "சுவரைக்" கட்டிவிடுவதென்பதே இப்புதிய யோசனையாகும். ஒரு இடத்தில் இம் மாயச் சுவரைக் கட்டினர். பல விமானங்களை ஓட்டி வந்தபோது அந்த விமானங்களெல்லாம் மாயச் "சுவரில் மோதி" கீழே இறங்கிவிடவேண்டியதாயிற்று. இவ்வித சுவரை பிரிட்டிஷ் தீவைச் சுற்றி அமைத்து விட்டால் சத்துருவிமானங்கள் திடீரென வந்து பிரிட்டனில் வெடிகுண்டு வீச முடியாது போகுமென்று சர் ரோஜர் கேஸ் கூறுகிறார். பிரிட்டிஷ் விமானங்களில் அமைக்கும் ஓர் ரகசிய கருவியின் பயனாக மாயச்சுவரைத்தாண்டிச் சென்றுவிடலாம்.

# புங்குடுதீவு—வேலணைப் பாலம்.

## மலாய்நாட்டிலுள்ள யாழ்ப்பாணமக்களின் மனு.

மலாய் நாடுகளிலுள்ள யாழ்ப்பாண வாசிகளால் புங்குடுதீவு-வேலணை இணைப்புப் பாலத்தைக் குறித்த ஓர் மநு இலங்கைப் போக்குவரத்து நிர்வாக சபைக்கு அனுப்பப்பட்டிருக்கின்றது. இவர்கள் மேற்படி விஷயத்தைக் கூடிய விரைவில் ஆலோசித்து கெடுகோளாக உள்ள மனக்குறையை நீக்கி அவ்வூர் வாசிகளின் ஆசிர்வாதத்தைப் பெறும்படி மநு மூலமாக இலங்கைப் போக்குவரத்து நிர்வாகசபையை வேண்டிக் கொண்டனர்.

மேலும் 1926 ம் ஆண்டு ஜூன் மாதம் 7 ந் தேதியன்று இலங்கைத் தேசாதிபதி யாழ்ப்பாணத்திற்கு விஜயஞ் செய்த பொழுது மலாய் நாட்டிலுள்ள யாழ்ப்பாண வாசிகள் பிரிட்டிஷ் ஆட்சி ஏற்பட்டு நூறு வருஷமாயும் இன்னும் புங்குடுதீவு வாசிகளின் போக்கு வரத்துக் கஷ்டம் நீங்கவில்லையே என ஓர் தந்தி அனுப்பியிருந்தனர். தற்போது அத் தந்தியின் பிரதியும் இலங்கை நிர்வாக சபைக்கு அனுப்பப்பட்டிருக்கின்றது.

மலாய் நாட்டுப் புங்குடுதீவு ஐக்கிய சங்கத் தலைவர் திரு வ. இ. துரைசாமியும் உபதலைவர் திரு எம். பசுபதிப் பிள்ளையும் இலங்கைப் போக்குவரத்து நிர்வாக சபைக்கு அனுப்பியிருக்கும் மநுவில் மேற்படி விஷயம் முதலில் அரசாங்க சபையாரால் ஆலோசிக்கப்பட வேண்டுமென்று நிர்வாகசபை அறிக்கை செய்த போதிலும் சில செய்தியின் நிமித்தத்தின் காரணமாக நிர்வாகசபையின் புனராலோசனைக்கு அனுப்பப்பட்டதென்றும், இவ் விஷயத்தில் போக்குவரத்து மந்திரியும் அவரது நிர்வாக சபையாரும் ஊக்கங்கொண்டிருப்பதைத் தாங்கள் உணர்ந்திருக்கிறதாகவும் குறிப்பிட்டு அப்பால் இலங்கைப் பத்திரிகைகள் செய்யும் உதவியையும் புங்குடுதீவு வாசிகளின் கஷ்டத்தையும் குறிப்பிடுகின்றனர்.

தற்போது திரு எஸ், எம் பொன்னையா இலங்கைக் கவர்னருக்கு அனுப்பிய மநுவும் பிரதியும் கலோனியல் செக்ரிட்டரி கந்தோரின் பதிலின் பிரதியும் மேற்படி மநுவுடன் சேர்த்து அனுப்பப்பட்டிருக்கின்றன.

மேற்படி பாலத்தைக் கட்டுவதால் புங்குடுதீவு வாசிகள் மட்டுமன்று ஏனைய தீவுகளில் வசிக்கும் மக்களுக்கும் போக்குவரத்துக் கஷ்டம் நிவர்த்தியாகும்.

# காவெட்டிக் கலக வழக்கு

## காயமுற்றவன் மனைவி கூறிய சாக்ஷியம். எதிரிகளுக்குக் கடூழியமும் அபராதமும்

"நாலாம் எதிரி முதுகில் அடிக்க, முதலாம் எதிரி தலையில் வெட்ட, மூன்றும் எதிரி கல்லாற் குத்த, இரண்டாம் எதிரி ஓர் பொல்லால் அடித்தார்"

(நமது நிருபர்)

சென்ற 4-5-36. திங்கட்கிழமை யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் காவெட்டிமேற்கில் வசிக்கும் (1) வல்லி, வேலன் (2) வேலன் நல்லான் (3 வேலன் வல்லி (4) வேலன் சின்னவன் 5) கட்டையன் சிவலை (6) சின்னவன் கறுவல் ஆகியவர்கள் சென்ற ஜூலை மீ 16-ம் தேதி அவ்வூர் வைரவன் சின்னவனென்பவனுக்கு ஓர் சிறிய கோடரியால் கடுங்காயமுண்டாக்கியதாகவும் அவனுடைய மனைவி சீதேவிக்கும் காயமுண்டாக்கியதாகவும் குற்றஞ் சாட்டப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

வழக்காளி சார்பாக முடிக்குரிய நியாயவாதி S. கனகசபையும் எதிரிகளுக்காக நியாயவாதி திரு. மாசிலாமணியும் வாதித்தனர்.

சின்னவனுடைய மனைவியாகிய சீதேவி சாட்சியம் கூறியதாவது:—

நான் காயமுற்றவரது மனைவி. நாங்கள் இந்த எதிரிகட்குமாறக பொலீஸ் நீதவானுக்கு ஒரு பெட்டிசம் போட்டோம். அது மணியகாரனுக்கு அனுப்பப்பட்டது. மணியகாரன் பெட்டிச விசாரணையில் எதிரிகளை எச்சரிக்கைசெய்து அனுப்பினார். இப் பெட்டிச விசாரணை ஆடிமீ 14-ந் திகதி நடந்தது. அடுத்த 16-ம் திகதி நாங்கள் வீட்டிலிருக்கும்போது (அப்போது நான் சமைத்துக்கொண்டிருந்தேன்) பொழுது மறைந்தபின், 1-ம் எதிரி கையிலோர் சின்னக் கோடரியுடனும் 2-ம் எதிரி ஓர் பொல்லுடனும் 3-ம் எதிரி கல்லுடனும் வந்து அவரது கல்லால் எறிந்தார்கள். ஓர் எறி எனது தலையில் விழுந்தது. நான் எனது புருஷனையழைத்து நடந்ததைத் தெரிவித்தேன், அவர் உடனே பேசினார். இந்த நேரத்தில் 4-ம் எதிரி ஓடிவந்து அவருக்கு முதுகில் அடிக்க 1-ம் எதிரி முப்பக்கத்துத் தலையில் கோடரியால் அக்கடி 3-ம் எதிரி கல்லால் குத்த 4-ம் எதிரி ஓடிவந்து எனக்கு ஓர் பொல்லால் அடித்தார். அடி தோளில் விழுந்தது. இதன் பின்புதான் இவ் வெதிரிகள் எல்லாருமாக எனது புருஷனை அமர்த்திப் பிடித்துக்கொண்டு அடித்தார்கள் ஆனால் 5-ம் எதிரி அவருடைய தலைமயிரைப்பிடித்து இழுத்துக்கொண்டு போனார். அந்த நேரத்தில் நானும் எனது இருமக்களும் தான் இருந்தோம் எங்கள் சத்தத்துக்கு வள்ளியும் வேறு பலரும் வந்தார்கள் வள்ளி இவ்வெதிரிகளை விடும்படி சொன்னாள். அவர்கள் கேட்காததால் அங்கே கிடந்த சிறிய கத்தியொன்றை எடுத்து 3-ம் எதிரியை வெட்டினாள் அவள் எங்கேவெட்டினாளென்று எனக்குத் தெரியாது, எதிரிகள் எல்லாரும் இதன்பிற்பாடு ஓடிவிட்டார்கள்.

நான் சம்பவத்தை விதானைக்கு அறிவித்தேன். விதானையாருக்கு உடைத்த சட்டிபானைகளையும் காட்டினேன்.

7-5-36.

இன்று மேற்படி வழக்கு மீளவும் விசாரணை செய்யப்பட்டபின், நீதிபதி முதலாம் எதிரிக்கு 9 மாதக் கடூழியச் சிறைத்தண்டனையும், மூன்றும் எதிரிக்கு 50 ரூபா அபராதமும் விதித்தார்

# கெய்ஸர் சக்கரவர்த்தியின் தற்போதைய நிலை.

## முடிதரித்தமன்னன் பிடிதரித்த கோடரிபற்றி மரம் வெட்டுகிறார்

### சக்கரவர்த்தினி பத்திரிகை படிக்கும் காட்சி;

### 'ஜம் ஜம்'என்று ஜொலிக்கும் சாப்பாட்டுமேசை

புதினம் விழைவது மனிதனின் இயற்கை. புதிய முறைகளைச் சோதனை செய்து பார்க்கவேண்டுமென்று மனிதனுக்கு ஆசை ஏற்படுவது சகஜம். இந்த ஆசையின் பயனாக இப்போது அநேக ராஜ வம்சங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அரசனைத் தெய்வத்தின் அம்சமாகக் கருதி வழிபட்ட காலம் மலையேறி வெகு காலமாகி விட்டது. இப்போது அநேகமாக எங்கும் குடியாட்சி ஏற்பட்டு விட்டது. முடியாட்சி ஒழிந்தது முடி தரித்த மன்னர் செங்கோல் தாங்கிய கையில் கோடரியைத் தாங்கி விறகு வெட்டுகிறார்கள். ஐரோப்பாவில் அரசு செலுத்திய ஜெர்மன் ராஜ குடும்பமென்ன, பிரஞ்சு ராஜ குடும்பமென்ன, ரோமனோவ் வம்சமென்ன, பிரகன்ஸா வம்சமென்ன, ஹாப்ஸ்பர்க் வம்சமென்ன எல்லாக் குடும்பங்களும் வம்சங்களும் இப்போது தேசப் பிரஷ்டமாகித் திண்டாடுகின்றன. சீன ஏகாதிபத்தியமும் தனது சக்கரவர்த்தியை வெளியேற்றி விட்டது.

இவ்வாறு முடியிழந்து கொடியிழந்து செங்கோலிழந்து திரியும் மாஜி மன்னர்கள் இப்போது எவ்வாறு தங்கள் வாழ்நாட்களைக் கழிக்கிறார்கள்?

அவர்கள் தங்கும் இடங்களில் அவர்களுக்குப் பழைய மரியாதைகளெல்லாம் இப்போதும் நடைபெறுகின்றனவா? பொழுது சாய்ந்தது அவர்கள் சதியாலோசனை செய்கிறார்களா? அவர்களுடைய பழைய ஆடம்பரங்களை விடுத்து இப்போது எளிய வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கிறார்களா? இப்போது அவர்கள் மனோபாவம் எப்படி யிருக்கிறது? தற்போதைய எளிய வாழ்க்கையில் அவர்களுக்குத் திருப்திதானா? இன்னும் இவை போன்ற எத்தனையோ கேள்விகள் எழுகின்றன.

### ஜெர்மன் சக்ரவர்த்தினி.

"டூர்ன் ஹவுஸ்" என்ற டச்சுக் கோட்டை யொன்றிருக்கிறது. அக்கோட்டையையடுத்த நந்தவனத்தில் மாஜீ ஜெர்மன் சக்ரவர்த்தினி உலாவிக்கொண்டிருக்கிறாள். இவளது புருஷன் உலகப் பிரசித்தி பெற்ற யுத்தப்பிரியரான கெய்ஸர் சக்ரவர்த்தி. சுமார் 30 வருஷ காலமாகக் கெய்ஸர் சக்ரவர்த்தி சாக்ஷாத் கடவுளாகவே விளங்கினார். ஜனங்களெல்லாம் இவர் பெயரைச் சொன்னாலே நடுங்குவார்கள். அப்பேர்ப்பட்ட கெய்ஸர் இப்போது கோடரி கொண்டு விறகு வெட்டுகிறார். மாஜி சக்ரவர்த்தி மரம் வெட்டுகையில் மாஜி சக்கரவர்த்தினி சற்றுத்தூரத்தில் உட்கார்ந்துகொண்டு பத்திரிகைகளை வாசித்துக்கொண்டிருக்கிறாள். இவ்விருவரும் இந்த எளிய வாழ்க்கையைக் கொண்டு இற்றைக்கு 14 ஆண்டுகள் ஆகின்றன. ஆனால் இவ்விருவருக்கும் இன்னும் பழைய சுபாவம் போகவில்லை. அவர்கள் இன்னும் மன்னரும் ராணியுமாகவே தங்களை நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். மாஜி கெய்ஸர் இப்போதும் "ராணுவஉடை" தான் அணிந்துகொண்டு வெளியே செல்லுகிறார். அவர் மனைவி தமது பரிவாரங்களை இன்னும் வைத்துக்கொண்டுதானிருக்கிறாள். இவர்கள் இப்போதிருக்கும் மாளிகையில் கடிகாரப்படி ஒவ்வொரு காரியங்களும் ஒழுங்காக நடைபெறுகின்றன. ஒரு வாரத்துக்கு 500 ஜதை வெள்ளிக் கத்திகளும் "போர்க்"குகளும் 1000 வெள்ளித் தட்டுகளும் சுத்தமாகக் கழுவப்பட்டு பொலிஷ் பூசப்படுகின்றன. அவர்கள் சாப்பிட உட்காரும் மேசைகள் எல்லாம் வெள்ளிச் சாமான்களால் ஜம் ஜம் மென்று ஜ்வலிக்கின்றன.

### தினசரிவேலை.

அனுதினமும் காலை 8 மணிக்குச் சிற்றுண்டி வைக்கப்படுகின்றது. அதையருந்திய பின் மாஜி கெய்ஸரும் அவரது மனைவியும் காட்டுக்குப் புறப்படுகிறார்கள். பருத்த சரீரமும் வட்ட வடிவமான முகமும் மருண்ட பார்வையும் உள்ள மாஜி கெய்ஸரின் மனைவி பளபளவென்று மின்னும் பட்டாடை புனைந்து தலையில் ஒரு சிறிய குடையளவுள்ள தொப்பியையும் மாட்டிக் காலில் பொத்தான் வைத்த பூட்சுகளையும் மாட்டி இடுப்பில் தினசரிப் பத்திரிகைகள் அடங்கிய ஒரு கட்டைச் சார்த்துகொண்டு ராணியைப்போல கம்பீரமாக நடந்து செல்வது வேடிக்கையாகவே இருக்கிறது. அவரருகில் வெளித்த தேகமும் குழிந்த கண்களும் செக்கிறமான மீசையும் தாடியும் இடையிடையே பொட்டலான தலையு முள்ள மாஜி கெய்ஸர் ராணுவ உடையணிந்து இடையில் ஒரு சிறு கோடரியைச் சொருகிக்கொண்டு நிமிர்ந்து செல்கிறார். இருவரும் புறப்படும்போது வேலைக்காரர்கள் அவர்களுக்கு ராஜ மரியாதை செய்கிறார்கள். இவ்வாறு இருவரும் சிறிது தூரம் செல்ல ஒரு காடு காணப்படுகிறது. அக்காடு ஒரு காலத்தில் சோலையாக இருந்தது. நிழல் தரும் தருக்கள் பல இருந்தன. ஆனால் இப்பொழுது அக்காடு வெறும் பொட்டல் காடாக இருக்கின்றது. மாஜி கெய்ஸர் கடந்த 14 வருஷ காலமாக பெரிய பெரிய மரங்களையெல்லாம் தமது கோடரியால் வெட்டி வீழ்த்தி விறகுக் குவியல்களாக்கிவிட்டார். இப்போது அக் காட்டில் வெட்டுண்டு வீழ்ந்த சிறு கிளைகளும் சருகுகளும் மனிதரின் கால்படும்போது சட சட வென்ற சப்தத்துடன் நொருங்கிப் போகின்றன. வருஷக் கணக்காய் வெட்டிக் குவிக்கப்படுகின்ற இந்த விறகுக் கட்டைகள் மலிந்துவிட்டன. எனவே அக்கட்டைகளில் 'டப்ளியு' என்ற எழுத்தைச் செதுக்கி அவற்றை நண்பர்களுக்கு இனாமாகக் கொடுத்துவிடும்படி மாஜி கெய்ஸர் உத்தரவிட்டிருக்கிறார்.

சுமார் 2 மணிநேரம் விறகு வெட்டியபின் மாஜி கெய்ஸர் ஒரு கட்டையின்மீது உட்கார்ந்து இளைப்பாறுகிறார். அப்பால் இருவரும் கோட்டையை அடுத்த சோலையில் உலாவுகிறார்கள். கணவனும் மனைவியும் ஏதோ பேசிக் கொள்கிறார்கள். "இன்று அந்தப் பிரபு அழைத்திருக்கிறார். அங்கே எனக்கு விருந்து" என்று மாஜி கெய்ஸர் சொல்லுகிறார். இருவரும் அதை விஷயமாகச் சம்பாஷிக்கிறார்கள். இவ்வாறு பேசிக்கொண்டே இருவரும் மாளிகைக்கு வந்து சேருகிறார்கள். வேலைக்காரர்களின் ராஜ மரியாதைகளை ஏற்றுக்கொண்டு இருவரும் உட்புகுந்து தங்கள் உடைகளை மாற்றிக்கொண்டு சாப்பாட்டு மண்டபத்துக்கு வருகிறார்கள். சாப்பாடு தயாராக இருக்கிறது. உணவருந்தியபின் சிறிது இளைப்பாறி உலக சமாச்சாரங்களைப்பற்றிப் பத்திரிகைகள் மூலமாக இருவரும் அறிந்துகொள்கிறார்கள்.

மாலை 5 மணிக்கு தேநீர் அருந்தியபின் இருவரும் யாராவது ஒரு பிரபுவீட்டுக்குப் போகவேண்டியிருந்தால் போகிறார்கள். அல்லது காலாற உலாத்துகிறார்கள். மாலை 7-30 மணிக்கு இராப் போஜனம் நடைபெறுகிறது. விருந்தாளிகளும் நண்பர்களும் இராப்போஜனத்திற் கலந்து கொள்கிறார்கள். மாஜி கெய்ஸரும் அவரது பத்தினியும் பழைய பெருமை தோன்றும் முகத்துடன் விருந்தினரை உபசரிக்கிறார்கள்; மெய்க்காவலாளிகள் இரு மருங்கிலும் மரியாதையாக நின்றுகொண்டிருக்கின்றனர். சாப்பாடு வெகு குதூகலமாக நடைபெறுகிறது. சில சமயங்களில் மாஜி கெய்ஸர் ஏதாவது பிரசங்கஞ் செய்வார். மற்றவர்கள் ராஜ சமூகத்தில் எவ்வித மரியாதையாயிருந்து கவனிப்பார்களோ அவ்வித மரியாதையுடன் கவனிக்கிறார்கள். மாஜி கெய்ஸர் சில சமயங்களில் சுற்றுப்புறங்களிலுள்ள டச்சுப் பிரபுக்களின் மாளிகைக்குத் தமபதிசகிதம் விஜயம் செய்து விருந்துண்டு திரும்புவதுமுண்டு.

---

## பிரிட்டிஷ் இராணுவத்திற்கு அமெரிக்க கோவேறு கழுதைகள்.

### 366-ல் 365 இந்தியா போய்ச் சேர்ந்தன.

ஒமாஹா, நெப்ராஸ்கா—இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் இராணுவம் சமீபத்தில் 375 அதிகமாக அமெரிக்கக் கோவேறு கழுதைகள் வாங்கியிருக்கிறது. கோவேறு கழுதைகள் வாங்குவோராக அமெரிக்கா முழுவதும் பிரபலமாயுள்ள மிஸ்டர் பிராங் சியலைல், அவர் கராச்சியிலிருந்து திரும்பி வந்ததும் அறிவிக்கப்பட்டது.

மிஸ்டர் சியலன் தன்வக்காலியாக சென்ற 14 வருடங்களாய் இங்கிலாந்துக்கு கோவேறு கழுதைகள் விற்று வருகிறார்.

அவர் கடந்த முறை பிரிட்டிஷ் இராணுவத்திற்கு விற்றதுபற்றி விசேஷமாகப் பெருமை பாராட்டினார். எனெனில் நவம்பர் 26-ந் தேதியன்று அமெரிக்காவை விட்டுப் புறப்பட்ட 366 கோவேறு கழுதைகள் இந்தியா போய்ச் சேர்ந்தபொழுது ஒன்று மட்டும் குறைந்திருந்தது. அந்தஒரு கழுதை பிரயாணத்தின் போது இறந்து விட்டது.

இப்பொழுது மிஸ்டர் சியலன் பிரிட்டிஷ் இராணுவத்திற்கு மற்றொரு கோஷ்டி கழுதைகளை அனுப்புவதற்கு அவைகளுக்காக மத்திய மாகாணங்களில் சுற்றுப் பிரயாணம் செய்யத் தயார் செய்து கொண்டிருக்கிறார்.

---

### சயாமில் மிளகு கட்டுப்பாடு.

பாங்காக், ஏப்ரல் 23

ஸயாமிலிருந்து ஏற்றுமதியாகும் மிளகின் தரத்தைக் கட்டுப்படுத்துவதற்காக மார்ச்சு மாசக் கடைசியில் சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட சட்டம் இப்பொழுது கெஜட்டில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. புதிய சட்டத்திற்குட்படாது மிளகு ஏற்றுமதி செய்ய முயற்சிக்கு மெவரும் 5,000 டிக்கல் அபராதத்திற்கு உட்படுவதுடன், மிளகும் பறிமுதல் செய்யப்படும்.

---


### கண்ணோ பிரதானம்

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை வடகிழக்கில் பிறவுண்றோட் (நரியன்குண்டு) ரத்தினவாசத்தில் அமைக்கப்பெற்ற அமிர்தானந்த வைத்தியசாலையில் இப்போது நேத்திரத்திறகுரிய சிகிச்சைக்கு வேண்டப்படும் ஔஷதங்கள், கருவிகளும் சேர்க்கப்பட்டிருத்தலால் வேண்டியவர்கள் காலை 7 மணி முதல் 10 மணி வரை வசதிபாக ஆலோசனை செய்து சிகிச்சை பெற்றுக்கொள்ளலாம். மற்றைய நோய்களுக்கு வேண்டிய சிகிச்சை முன்போல் நடைபெறும்.

வைத்தியசாலை சொந்தக்காரர் த இராமலிங்கம் வைத்தியர்

Address:— Manager
Amirdananda Vaidyasala
"Ratna Vasa" Brown Road
Vannarponnai
Jaffna (Ceylon)
Y 26. 7-5-36 to 30-4-37


---

## ஜவஹர்லால் அவர்களின் சுய சரிதை

### "பல கட்டுக்கதைகள்"

"நாம் எம் உடைகளைப் பாரிஸ் நகரத்திற் சலவைசெய்விக்கவில்லை; நான் இளவரசரோடு படிக்கவில்லை; தந்தையார் சிறையில் சாம்பெயின் குடிக்கவில்லை"

லண்டன், ஏப். 22

சென்றவாரக் கடைசியில் லண்டனில் பண்டித ஜவஹர்லால் நேருவின் சுயசரிதை வெளியாயிருக்கிறது. அதில் அவர் தம்மைப்பற்றியும் தமது குடும்பத்தாரைப்பற்றியும் இந்தியாவில் பரவிவரும் பல கதைகளைக் கண்டித்திருக்கிறார். அவர் கூறியிருப்பதாவது:— "என்னைப்பற்றியும் என் தந்தையைப்பற்றியும் அடிக்கடி சொல்லப்படும் ஒரு கட்டுக்கதையுண்டு. வாரந்தோறும் நாங்கள் எங்களது உடைகளை இந்தியாவிலிருந்து சலவைக்காகப் பாரிஸுக்கு அனுப்பிவந்ததாகச் சிலர் கூறுவதுண்டு. நாங்கள் இதைப் பலதரம் மறுத்திருக்கிறோம். அப்படி மறுத்தும் இந்தக் கதை இன்னும் பரவிவருகிறது. இதைவிடக் கேவலமான கதை வேறொன்றுமில்லை. இவ்வித வதந்தியைப் பரப்பிவருவோர் சுத்தமுட்டாள்களாக விருக்கவேண்டும்.

இன்னொரு கதையும் இவ்விதமே எவ்வளவோ மறுத்துச் சொல்லியும் விடாமல் வளர்க்கப்பட்டுவருகிறது. நான் வேல்ஸ் இளவரசரோடு படித்ததாகவும், அவர் இந்தியாவுக்கு வந்தபோது என்னைப்பற்றி விசாரித்ததாகவும், அப்போது நான் சிறையில் இருந்ததாகவும் சொல்லப்படுகிறது. நான் அவருடன் படித்ததில்லை. அவரைச் சந்திக்கும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்ததுமில்லை. நான் அவருடன் பேசியதுமில்லை.

#### சிறை அநுபவம்

நானும் எனது தகப்பனாரும் சிறையிலிருந்தபோது ஒரு "கேவலமான" செய்தி பத்திரிகைகளில் வெளிவந்தது. அப்போது ஸேர் ஹார்கோர்ட் பட்லர் கவர்னராக விருந்தார். அவர் சிறையிலிருந்த என் தகப்பனாருக்குச் சாம்பெயின் சாராயம் அனுப்பியதாகச் சொல்லப்பட்டது. ஸர் ஹார்கோர்ட் என் தந்தை சிறையிலிருந்தபோது ஒரு பொருளையும் அனுப்பவில்லை. வேறு எவரும் சாம்பெயின் சாராயம் முதலிய லாகிரி வஸ்துக்களை அனுப்பவில்லை. 1920-ம் வருஷத்தில் காங்கிரஸ் ஒத்துழையாமையை மேற்கொண்டபோது லாகிரி வஸ்துக்களை உபயோகிப்பதை அவர் விட்டுவிட்டார்.

#### கராச்சி காங்கிரஸ் தீர்மானம்

கராச்சி காங்கிரஸில் நிறைவேற்றப்பட்ட பிரஜாவுரிமைத் தீர்மானம் பொது உடைமைக் கட்சியினரால் தயாரிக்கப்பட்டதாகவும் போல்ஷிவிக் கட்சியினர் காங்கிரஸ் தலைவர்களுக்குப் பணம் அனுப்பிவருவதாகவும் ஸ்ரீமான் எம். என். ராய் அந்தத் தீர்மானத்தைத் தயாரித்ததாகவும் அதை நான் ஏற்றுக்கொண்டு காந்திஜிக்கு அனுப்பிக் காங்கிரஸ் அதை அங்கீகரிக்காவிட்டால் நான் காந்திஜியை எதிர்க்க நேரும் எனப் பயமுறுத்தியதாகவும் அதன்மேல் காந்திஜி காங்கிரஸ்வாதிகள் பலரும் களைத்திருக்கும் சமயத்தில் கடைசிநாள் கூட்டத்தில் அதை அவசரமாக நிறைவேற்றிக்கொண்டதாகவும் ஒரு கதை கிளம்பியது. கவர்ன்மெண்டுக்கு வேண்டிய பத்திரிகைகளும் கொஞ்சங் கொஞ்சமாக இதைப்பற்றிப் பிரஸ்தாபிக்க ஆரம்பித்தன. இது கவர்ன்மெண்டின் அபிப்பிராயமென்றுதான் சொல்லவேண்டும். ஸ்ரீமான் ராய் இத் தீர்மானத்தைக் கண்டால் பரிகசித்திருப்பார்.

அவருக்கும் அந்தத் தீர்மானத்துக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை. நான் அந்தத் தீர்மானத்தைத் தயாரித்துக்கொண்டிருக்கையில் எத்தனையோ நண்பர்கள் என் விடுதிக்கு வந்துபோனார்கள். அப்போது நான பலரைக் கலந்து பேசியதுண்டு.

#### ஸர் கிரிம்வுட் மியர்ஸ்

இது நிற்க, இன்னொரு விஷயம். ஸர் கிரிம்வுட் மியர்ஸ் அலகபாத் ஹைக்கோர்ட்டு தலைமை நீதிபதியாக விருந்தார். அந்தச் சமயத்தில் நான் முதல் முதலாகக் கைது செய்யப்பட்டேன். நான் விடுதலையடைந்ததும் அடிக்கடி தம்மை வந்து கண்டு போகும்படி அவர் எனக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார். முனிஸிப்பல் வரியை ஆக்ஷேபிப்பதை ஒரு வியாஜமாகக்கொண்டு அவர் என்னிடம் அடிக்கடி வருவார். "மிதவாதிகள் — பயங்கொள்ளிகள் — சந்தர்ப்பத்துக் கேற்றவாறு நடப்பவர்கள் தைரியமில்லாதவர்கள் அவர்களின் வார்த்தைகளுக்கு நாங்கள் மதிப்புக் கொடுப்பதாகவாத் தாங்கள் நினைக்கிறீர்கள்" என அவர் என்னைக் கேட்டார்.

இவ்வித ருசிகரமான சம்பவங்கள் பல இந்தப் புத்தகத்தில் காணப்படுகின்றன.

---

## காந்திஜீயின் அரிய உபதேசம்

### கிராமங்களில் இலக்கிய நூலறிவு அவசியம்

### "வகுப்புத் துவேஷமூட்டும் பிரசுரங்களைப் போலக் காமநூல்களும் வெறுக்கப்பட வேண்டும்"

நாகபுரி, ஏப்பிரல் 21.

இன்று இவ்விடத்தில் ஹிந்தி ஸாஹித்ய சம்மேளனத்தின் ஜூபிலிக் கூட்டம் நடைபெற்றது. ஜவஹர், ஸர்தார்படேல், கே. எம். முன்ஷி ஆகியோர் வந்திருந்தார்கள். மகாத்மா தம்பதிகள் சிறிதுநேரம் நடவடிக்கைகளைக் கவனித்தனர். முதலில் தேசீயக் கீதமும், பிறகுவரவேற்புக் கீதங்களும் பாடப்பட்டன.

மகாத்மா காந்தி தலைமை வகித்துச் செய்த பிரசங்கத்தின் சாரம் வருமாறு:—

ஹிமாசலம் முதல் கன்னியாகுமரி வரையில் இந்தியரனைவரும் ஒரே குழாம் என்பது உண்மை. ஆகவே எல்லாப் பாஷை விற்பன்னர்களும் ஒன்றுபட்டு சேவை செய்யக்கூடுமென்பது என்னுடைய உறுதியான நம்பிக்கை. அருவருப்பான மகாணபாஷைகளைக் கற்றுக்கொள்ளுவதற்குக் கூட யாரும் முற்படுவதில்லை. தற்கால இலக்கிய அறிவையும் நாம் கிராமங்களில் பரப்புதலவசியம். வகுப்பு ஒற்றுமை, ஒழுக்கம் முதலியவற்றை உண்டுபண்ணக்கூடிய நூல்கள் இந்நாட்டில் மலியவேண்டும்.

காம நூல்களை நான் வெறுக்கிறேன்; வகுப்புத்துவேஷ மூட்டும் பிரசுரங்களைப்போல அவையும் நிராகரிக்கப்பட வேண்டும். எனக்கு அதிகாரமிருந்தால் நான் அப்படித்தான் செய்வேன்.

சர்வமத சம்மதமான நூல்கள் ஹிந்தி மூலம் இந்தியா முழுமையிலும் பரப்பப்படுதல் வேண்டும். இக்காரியங்களுக்கான ஏற்பாடுகளைப் பற்றி விவாதம் நடைபெறவேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

வாழ்க அந்தணர் வானவ ரானினம
வீழ்க தண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாம் அரனாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்துசாதனம்.

யாழ்ப்பாணம்: தாதுஸ்ரீ
சித்திரைமீ உடுவ வியாழக்கிழமை

## பழியோடு கூடிய வெற்றி

“காடுபோந்தனன் இந்திரன்!
பொன்னகர் கரிந்து
பாடு சேர்ந்தது! சயந்தனும்
சிறையிடைப்பட்டான்!
.................................”

என்ற நிலைமை அபிஸீனிய சக்கரவர்த்திக்கும் அவருடைய தேசத்திற்கும் வந்துசேர்ந்தது இந்தச் சக்கரவர்த்தி நீதியிலும் நேர் தன்மையிலும் பரதநாட்டைப் பரிபாலித்த பழைய சக்கரவர்த்திகளோடு வைத்து மதிக்கத்தக்கபெரியவராவர் தமதுநாடுபலசிற்றரசர்களாலும்அதிகாரிகளாலும் பாகம் பாகமாகப் பரிபாலிக்கப்பட்டுவருவதையும் அவர்களிடையே பரஸ்பரம் பிணக்குகளும் சண்டைகளும் காலந்தோறும் முளுவதனால் அந்நாடு ஈடேற முடியாதுகிடப்பதையுங்கண்டு தமது விவேகத்தினாலும் திறமையினாலும் போராற்றலினாலும் அந்தச் சிற்றரசர்களையெல்லாம் ஒன்று கூட்டித் தமக்குக் கீழ்ப்படுத்தி, தாமே சக்கரவர்த்தியாகி தமது பரிபாலனத்தில் அவர்களையும் நீதியோடு இராச்சியஞ் செய்யும்படி நிர்வகித்துவிளங்கி வந்தவர். மேலைத் தேசமுறைகளில் நல்லன எவைகளோ, பாதுகாப்பானவைகள் எவைகளோ அவைகளையெல்லாம் ஒவ்வொன்றாகக் காலந்தோறும் தம் நாட்டிலே கையாண்டுவந்தவர் உலக சமாதானத்தைக் காப்பதென்று நம்பி ஜெனிவாவிலுள்ள சர்வதேச சங்கத்தில் தாமும் ஒரு அங்கத்தவராய்ச் சேர்ந்துள்ளவர்.

அபிஸீனிய சக்ராதிபத்திடம் இவ்வாறு சீருற்றுவருவது இத்தலிய சர்வாதிகாரியாகிய முஸோலினிக்குப் பெரும் மண்ணுசை பொன்னுசைகளை உண்டாக்கிவிட்டது இற்றைக்கு 40 வருடங்கட்குமுன் இத்தலியர் இந்த நாட்டிற் படையெடுத்துச் சென்றபோது அபிஸீனியர் அந்த இற்றலியரைத் தோல்வியுறச் செய்து புறங்காட்டினர். அந்த ஞாபகமும் இத்தலிய சர்வாதிகாரியின் மனத்திற் பிறந்துவிட்டது அச் சர்வாதிகாரி பழிக்குப்பழி வாங்குதற்கு இதுவே வாய்த்தசமையம் என்று நினைத்தார். சர்வதேச சங்கத்திலே தாமுஞ் சேர்ந்திருந்தவராதலினுல் அவர்களுடைய சுயநல நோக்கங்களையும் பேடித்தனத்தையும் முஸோலினி உள்ளபடி அறிந்திருந்தார். தாம் அபிஸீனியருடன் யுத்தத்திற்குப் போனுல் தம்மைத்தடுத்தற்குச் சர்வதேசசங்கத்தாரிடம் ஆற்றலில்லையென்பதையும் அவர் அறிவாராதலினுல் இற்றைக்கு 7 மாசங்கட்குமுன் தமது சைநியத்தை அபிஸீனிய நாட்டிற்கு அனுப்பினுர். சர்வதேச சங்கம் தமக்குத் துணை புரியுமென்ற நம்பிக்கையினுல் அபிஸீனிய சக்கரவர்த்தியும் தமது பிறப்புரிமையான சுவாதீனத்தையும் புராதன நாட்டையுங் காக்கும்படி எதிர்த்துச் சமர்செய்யத் தொடங்கினர். சர்வதேச சங்கமும் சக்கரவர்த்திக்குத் தாம் கடைசிவரையில் துணைபுரிவதாக ஆசை வார்த்தைகள் சொல்லி வந்தது தொடங்கி நடைபெற்ற யுத்தத்திலே முதல் இத்தலியர் வெற்றியடைந்து வந்தனர். பின் மழைக் காலமாக அபிஸீனியர் இத்தலியரைப் புறங்கண்டு அவர்கள் தம்மிடம் முந்திப் பிடித்த நாடுகளையும் அரண்களையும் திருப்பிப் பிடித்தனர். இதனுல் இத்தலியர் தாம் தருமத்தோடு கூடிய யுத்தத்தினுல் அபிஸீனியரை வெல்லமுடியாதெனக்கண்டு முஸோலினிக்கு முறையிட, முஸோலினி தர்மயுத்தத்தினுலோ, அதர்ம யுத்தத்தினுலோ எப்படியேன்றுலும் பகைவரை வெல்லவேண்டுமென்று தம்முடைய சேனபதிகட்குக் கட்டளையிட்டார். உடனே கணக்கிறந்த ஆகாயவிமானங்கள் நச்சுப் புகைக் குண்டுகளுடன் இத்தலியைவிட்டுப் புறப்பட்டுவந்து அபிஸீனியப் படைகள்மீதும் ஏழைச்சனங்கள் மீதும் மழைபோல நச்சுப்புகை வெடிகுண்டுகளைப் பெய்பலாயின. இதனுல் அபிஸீனிய வீரர் பின்னிடைந்தனர் சக்கரவர்த்தி பகைவர்களாகிய இத்தலியர் செய்யும் அக்கிரமத்தையும் தம் சைநியங்களும் ஊரவரும் படும் துன்பங்களையும் உயிர்ச்சேதத்தையும் சர்வதேச சங்கத்தாருக்கு முறையிட்டார். அவர்கள் முஸோலினிக்குப் பயந்து, தம்மை நம்பிக் கருமத்திலிருந்த சக்கரவர்த்திக்கு உடனுக்குடன் துணைசெய்தலின்றிக் காலம் போக்கினர். தங்களுக்கு ஆபத்து அதிகப்படுவதைக்கண்டு அபிஸீனிய சக்கரவர்த்தியும் இராணியும் இராசகுமாரனும் அரசகுமாரியும் எல்லாரும் சர்வதேசசங்கத்திற்கு முறையிட்டனர் பிருத்தானியர் மாத்திரம் சிறிது ஆதரங்காட்ட, பிரான்ஸியர் உள்ளொன்று புறம்பொன்றாக நடந்து கொள்ள, அச்சங்கத்திலுள்ள ஏனைய இராச்சியப் பிரதிநிதிகள் கேட்டுங் கேளார்போல் வாளா விருந்தனர். இதற்கிடையில் இத்தலியர் பூரண வெற்றி யடையலாயினர், சக்கரவர்த்தி நாட்டைவிட்டகன்றுர். இராசதானியாகிய அடிஸ் அபாபா தீக்கிரையானது. இத்தலியர் தலைநகருட் பிரவேசித்து நாடுமுழுவதையுந் தமக்காக்கினர். யுத்தம் முடிந்தது. முடிவு இவ்வளவோடு நின்றுவிடவில்லை; உலகத்தவரால் வீராதி வீரனென்றும் மிகவும் நீதிநாடும் பெருந்தன்மையோடுங் கூடியவனென்றும் பாராட்டப்பட்ட முசோலினியின் புகழும் இதனுடு மாசுபட்டு முடிந்தது சர்வதேச சங்கமும் முடிந்தது அச் சங்கத்திற் சேர்ந்த தசிறுவராச்சியங்களின் போலிச் சமாதானக்கோள்கையும் முடிந்தது

இந்த விஷயத்தில் முசோலினியோ சர்வதேச சங்கத்தவர்களோ நேர் துரோகிகள் என்று ஆராயுமிடத்து, முசோலினி வெளிப்படையாகப் படைகளையனுப்பி யுத்தத்தைத் தருமமாகவோ அதர்மமாகவோ செய்து தன் காரியத்தை முடித்தமையினுலும், இச் சர்வதேசசங்கத்தார் நம்பிக்கைத் துரோகஞ் செய்தமையினுலும் முசோலினியைக் காட்டிலும் இச் சங்கத்தாரே பொல்லாத் துரோகிகள் என்று உலகஞ் சொல்லுகிறது

ஆனுல் ஒரு விஷயம் மாத்திரம் உண்மை. ஐரோப்பிய தத்துவ ராச்சியத்தினர் அபிஸீனிய நாட்டைக் கொள்ளைகொடுத்துவிட்டுத் தாம் இனிமேல் சமாதானமாக வாழலாமென்ற எண்ணத்தை விட்டுவிடவேண்டும். நர இரத்தத்தின் ருசிகண்ட புலி சும்மா இருக்கப் போவதில்லை; ஐரோப்பிய தத்துவ ராசியத்தினரெல்லாருமிருப்போர் ஏகோபித்து முஸோலினியை அடக்கி அபிஸீனிய ராசசிபத்தை மீட்டுச் சக்கரவர்த்திக்குக் கொடுப்பித்துப் பராக்கிரமத்தோடுங் கௌரவத்தோடும் இராச்சிய பரிபாலனஞ் செய்தாலொழிய, அபிசீனியச் சக்கரவர்த்தி இறுதியிற் சொன்ன பிரகாரம் அத்தத்துவராச்சியங்களெல்லாம் பரிகாசமாகவே போகவேண்டி ஏற்படும்.

## ‘யாரை விட்டது விதிவசம்?’

இந்தியாவுக்கு அக்பர் அரசர் எவ்வாறே, உருஷிய நாட்டிற்குப் பெருமைவாய்ந்த பீற்றர் மன்னன் எவ்வாறே, ஆப்கானிஸ்தானத்திற்கு அமானுல்லா எவ்வாறே அவ்வாறே அபிஸீனியாவுக்கு ஹெய்லி ஸெலாஸி மன்னனுக விளங்கினுர். இவர் இப்போது தமது நாட்டைவிட்டு வெளிப் போந்துவிட்டார். இதனுல், இவர் இத்தலியர்க்குப் பயந்து புறமுதுகிட்டு ஓடிவிட்டார் என்று பலரும் கருதுதல்கூடும். அங்ஙனங்கருதின் அது முற்றும் பிழையென்றே நாம் கூறுவோம். என்னே? அபிஸீனிய நாட்டின் அரியாசனத் தமர்ந்த மன்னர் பெருமக்களுள் மிக்க மேம்பா டுடையவரும் பராக்கிரமசாலியுமாகிய இம மன்னர் தன் உயிரை ஒரு பொருட்டாக மதிப்பவரல்லர் என்பது அவரது வீரச் செயல்களிலிருந்து நன்கு தெரியக் கிடக்கின்றதாகலின். இவருக்கு முன்னர் அபிஸீனியாவைத் தியடோர் என்னும் அரசர் ஆண்டு வந்தார். அவர் ஆட்சிக்காலத்தில பிருத்தானியர் படையெடுத்துச் சென்று மகதாலா என்னுமிடத்தைப் பிடித்தனர். இதனைக் கேட்டுச் சகிக்கலாற்றுத அம் மன்னன் உடனே மானங் காரணமாகத் தற்கொலைசெய்து உயிர்நீத்தான். இப்போது நடந்த அபிஸீனியா யுத்தத்திலும் இத்தலியர் அபிஸீனியர் மீதுபடையெடுத்ததுமுதல்ஹெய்லி ஸெலாஸி, இத்தலியரோடு தாம எதிர்த்து நின்று போராடவல்ல ஆயுதங்கள் முதலியவை தம்மிடம் இல்லையெனத் தெரிந்துகொண்டும் தருமமே ஈற்றில் தலையெடுக்கும் என்னும் ஏனைய சக்ராதிபத்தியங்கள் தருமத்திற்குத் துணைபுரியும் என்னும நம்பியே யுத்தத்தில் இறங்கினுர். இறங்கினவர் கடைசிவரையில் இளையாமல் யுத்தம் நடாத்தினுர். இம்மன்னர் போரில் வெற்றியடையாவிடின் உயிர்நீத்து விடுவதாகக் கூறிவந்தமையால் தம் முன்னேரைப்போலவே இவரும் தற்கொலை செய்துகொள்வரோ என்னும் அச்சம் ஜனங்களிடம் இருந்து வந்தது. ஆயின, தற்கொலை செய்துகொள்ளுதல் பேடிகள் செயலாகுமன்றே? இம்மன்னர் அவ்வாறு செய்தலை ஒழிந்து, தம நாட்டவரின் சுதந்திரத்தையும் மானத்தையும் நாட்டுதற்கு வேறுவழியைக் கையாடி வெளிக்கிளம்பியிருக்கிறர். இத்தலியர் யுத்த தர்மத்திற்கு மாறாக விஷக்காற்றுப் புகைகளையும் வெடிகுண்டுகளையும நிராயுதபாணிகளாகிய அபிஸீனியர் மீதுசொரிந்து பேடித்தனமான யுத்தம புரியக்கண்டும், ஐரோப்பிய வல்லரசுகள் அதனைப் பார்த்து வாளா இருக்கக்கண்டும, யுத்தத்தைத் தொடர்ந்து நடத்துவதால் ஈற்றில் தோல்வியே நிச்சயம என்பதைக் கண்டும் அவர் அடிஸ் அபாபாவில தங்கியிருத்தல் சுத்த மூடத்தனமேயாகுமன்றே? ஆதலால் அவர் தைரியத்தைவிடாமல் தக்க நேரத்தில் தக்கன ஆராய்ந்து செய்துளாரென்றே கருதப்படுகின்றது. இவர் வெளிக்கிளம்பியதோடு, இத்தலியர் அடிஸ் அபாபாவென்னும் தலைநகரைக் கைப்பற்றி ஒருபோதும் யாரேனும் ஒருவனை அரசனக ஏற்படுத்தனும் கூடும. ஆயின, ஹெய்லி ஸெலாஸி வெளியே இருக்குமவரைக்கும் இத்தலியர் மனோதிடத்துடன அங்கு இருக்க முடியாதென்பது நிச்சயம். அன்றியும், அபிஸீனியாவில் சிற்றரசர்கள் பலருளர். அவர்கள் ஒவ்வொருவரும தங்கள் தங்கள் சைநியங்களையும வைத்துக் கொண்டு தனித்தனிக் காட்டு ராஜாக்களாக விளங்குவார்கள். ஜென்மப் பகைவராகிய இத்தாலியரை இவர்கள் ஆறுதலாக இருக்கவொட்டார். இதுவேயுமன்றி, கரைபுரண்டு கலங்கியிருக்கும் அடிஸ் அபாபாவைச் சீர்ப்படுத்தவேண்டுமாயின், இத்தாலியர் சென்ற ஏழுமாதங்களாக யுத்தத்திற்குச் செலவிட்ட பணத்தைக் காட்டிலும் அதிகமான பணத்தைச் செலவிட்டாலே முடியுமாம். அபிஸீனிய அரசர் நாடுவிட்டகன்ற நிலைமையை நிதானிக்க முடியாமல ஐரோப்பிய அரசுகள் திகைத்து...

# அரிமாநோக்கு.

### பொது ஸ்தாபனங்கள்

யாழ்ப்பாணத்திற் பல பொது ஸ்தாபனங்கள் இருக்கின்றன. சபைகள், சங்கங்கள், ஆலயங்கள், கல்லூரிகள், கலாசாலைகள் முதலிய பல இவற்றின்பாற்பட்டன. புண்ணியவான்கள் பலர் இவற்றைக் காலத்துக்குக் காலம் நிறுவித் தமக்குப் பின், அவை நன்கு நடைபெறக் கூடிய ஒழுங்குகளையுஞ் செய்து வைத்துச் சென்றனர். அவர்கள் தமது வாழ்நாளிற செய்த பெருமுயற்சிக்கு அவை தமக்குப் பின்னும் செவ்வனே நடைபெறும் என்னும் பெரும் நம்பிக்கையே அவர்களுக்கு ஆறுதலளித்தது. இப்பெரியோர்களுக்குப் பின் அப்பொது ஸ்தாபனங்களைக் கையேற்று நடத்துவோர், அப்பெரியார்பால் அற்ப மேனும் அன்புடையராயின், அவற்றைச் செவ்வனே நடைபெறச் செய்தலிலேயே கண்ணுங் கருத்துமா யிருப்பர் ஆயின், யாழ்ப்பாணத்துள்ள பொதுஸ்தாபனங்களைப்பற்றி ஒவ்வொன்றன்பின் ஒன்றுகச் சிறிது சிந்தித்தற்று “அந்தோ! அவை ஆரம்பிக்குமபோதிருந்த அதியுன்னத நிலையென்ன? இப்போது அவை வீழ்ந்து கிடக்கும் பரிதாபகரமான நிலையென்ன!” என்றே மனம் வருந்துகின்றது. அவற்றை ஸ்தாபித்த பெரியோர் இப்போது உயிரோடிருப்பின், உண்மையிற் பெரிதும் வருந்தவரென்றே நாம் துணிந்து கூறுவோம். தருமச் சொத்துக்களைத் தம் சொந்த முன்னேற்றத்திற்காக உபயோகிப்போர் எத்தகையோர் என்பதை வாசகர்களே தம்முள் மதிப்பிட்டுக் கொள்ளுமாறு விட்டுவிடுகின்றேம். இவற்றுள் எவற்றையேனும் குறிப்பிட்டுச் சொல்லுதற்கு நாம் விரும்பவில்லை. என்னே? ‘சொன்னுலும குற்றம். சொல்லாமல் விடினும் குற்றம்’ என்ற நிலையில் இப்போது நாம் இருக்கின்றேம். தருமத்துக் கிரங்கியாயினும் இப்பொது ஸ்தாபனங்களுக்குப் பொறுப்பாளராயிருப்போர் அவற்றைத் தக்கவாறு நிர்வகித்து நடத்துவார்களாக அதுவே அவர்கள் நமது நாட்டுக்குச் செய்யத் தக்க பெரிய நன்மையாகும் என்பது நமது கருத்து.

—

### சுருட்டுத்தொழிலாளர்சங்கம்

யாழ்ப்பாணத்திலுள்ள தொழில்களில் முக்கியமான தொழிலாக விளங்கும் சுருட்டுத்தொழில் தற்போது மிக்க கேவலநிலையை யடைந்திருத்தல் யாழ்ப்பாணத்திலுள்ள தொழிலாளரைப் பெரிதும் பாதிக்கக் கூடியதாகவிருக்கிறது. உலகின் நாலுபக்கங்களிலும் தொழிலாளர்கள் தம்முள்ளே ஒற்றுமைப்பட்டுத் தொழிலாளர் சங்கங்களை ஏற்படுத்தி அச்சங்கங்கள் வாயிலாகத் தமக்குப் பலநன்மைகளையும் பெற்றுவித்துக்கொள்ளுகிறர்கள்; காலத்துக்குக் காலம் அரசாங்கத்தாருக்கோ அல்லது முதலாளிமார்களுக்கோ தமது குறைகளை எடுத்துக்காட்டி அவற்றை நிவர்த்தி செய்தும் கொள்ளுகிறர்கள் “ஒன்றுபட்டாலுண்டுவாழ்வே—நம்மில் ஒற்றுமை நீங்கில் அனைவர்க்குந் தாழ்வே” என்ற பாரதிப்புலவன் பாட்டினையிங்ஙனம் தொழிலாளர் தம்முள் ஒற்றுமைப்பட்டுச் செய்யும் வேண்டுகோள்கள் பெரும்பாலும் பூர்த்தியாக்கப்படவேண்டியே நேரிடும். இத்தகைய சங்கங்கள் இலங்கையின் ஏனையபாகங்களிலும் நிறுவப்பட்டுத் தொழிலாளர்களுக்கு நன்மையளித்து வந்தன; வருகின்றன. சமீபத்தில் திருக்கோணமலையிலும் இத்தகைய சங்கம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்திலும் இப்பெரியசங்கம் ஒன்று நிறுவப்பெற்றுத் தொண்டாற்ற முன்வந்துள்ளதை அறிந்து நாம் மகிழ்ச்சியடைகின்றேம். இதனுல், சுருட்டுத்தொழிலாளர்களுக்கிடையே ஒற்றுமை ஏற்படுவதோடு அவர்தம் குறைகளும் நிவர்த்திக்கப்படுமென நம்புகின்றேம். இச்சங்கம் நீடு வாழ்க. —

### ஆகாயவிமானம்

இற்றைக்கு 25 வருடங்களுக்கு முன் பிளாக்பூல் என்னுமிடத்திலிருந்து ஒரு ஆகாயவிமானம் சில கடிதங்களையும் கொண்டுபறக்கலாயிற்று. இதுவே முதன்முதல் இங்கிலாந்தில் கடிதம் கொண்டுசென்ற ஆகாயவிமானமாகும். ஆயின் இப்போதோ ஆகாயவிமானத்தின் மூலம் கடிதப் போக்குவரத்து எவ்வளவு விரைவாக நடைபெறுகின்றது என்பது வாசகர்கள் நன்கறிந்த விஷயமே. தற்போது மிஸ் எமி மொலிசன் என்னும் பெண் இங்கிலாந்திலிருந்து கேப்டவுனுக்கு 2½ மணிநேரத்திற் பறத்தற்கு ஆரம்பித்திருக்கின்றுள். இம்மங்கை தனது முயற்சியிற் சித்தியடைவாளாக.

—

### அதிகாரம் யார்?

முதலியார் இராமலிங்கம் அவர்கள் காலஞ்சென்றபின், ஒரு அதிகாரப் பட்டத்திற்கு இடம இருக்கிறது. இதைப் பெறுதற்காகப் பல முதலியார்மாரும் பிறரும் பாடுபாடெல்லாம் படுகிறர்கள். அவர்கள் பெயர்களை நாம் இங்கு குறிப்பிட விரும்பவில்லை. அறப்பும் ஆறுதலில்லாமல் இதற்காகப் பெரிதும் ஓடித்திரியும் இவர்கள் ஆறியிருக்கக் கூடியதாக அரசினர் அதை விரைவில் நிச்சயித்துவிட்டார்களென்றுல் மிகவும் நல்லது என்று யாதநாம் கருதுகின்றேம்.

—

### தலைவர்க்கு உபசாரணை?

நமது அரசாங்கசபைத் தலைவராகிய திரு. வை. துரைசுவாமி அவர்களுக்கு யாழ்ப்பாணத்தில் ஒரு உபசாரணைக் கொண்டாட்டம்நடத்துவதற்காகச் சிலர் மிக மும்முரமாக முயற்சித்தனர். அதற்காகப் பணமும் சேர்க்கப்பட்டது. நாமும் மிக அண்மையில் அந்த உபசாரணை நடைபெற்றுவிடப் போகிறதோ என எண்ணியிருந்தோம். திரு. துரைசுவாமி அவர்களுக்கு அரசாங்கசபை விடுமுறை நாட்கள் ஒருக்கு தான் அதற்குத் தாமதம் என்றும் கூறப்பட்டது. இப்போதோ அவரது விடுமுறை நாட்களும் முடிவடைந்து மீண்டும் அவர் அரசாங்கசபைக்குப் போகும் நாட்கள் நெருங்கி விட்டன. உபசாரணைக் கொண்டாட்டத்தைத்தக்கார்த்திருந்த நாமும் இவ்வுசாத்த நிலையாயினேம். இப்போது இது நடக்குந்தானே? அல்லது ‘பெய்யாப் பழங்கதையாய்க் கனவாய் மெல்லப் போய் விடுமே ?’ என்றுதான் நாம்...

# அரசர்மாளிகைதீக்கிரையாயிற்று

## முத்தமிடுவோர்க்கு அபராதம்

### மோட்டாரில் காதல் விளையாட்டுக்கள்

#### லீலா விநோதிகளைக் கண்டுபிடிக்கப் பிரஞ்சு கையாளும் முறை

மோட்டாரில் பிரஞ்சுக்காரர் ஆண் பெண்கள் காதல் விளையாட்டுகள் விளையாடினால் தண்டிக்கப் படுவார்கள். இவைகளால் ரஸ்தாவில் பல அபாயங்கள் ஏற்படுகின்றன.

மாடின் பத்திரிகை ஒரு மோட்டார் ஓட்டியின் காதலுணர்ச்சிக்குத் தக்கபடி தண்டனை உயர்த்தப்பட வேண்டுமென்று கூறுகிறது.

ட்யூனிஸ் என்னுமிடத்தில் மோட்டார் ஓட்டும் போது காதல் விளையாட்டுகள் விளையாடினால் கீழ்க்கண்டபடி தண்டனை கிடைக்கும்.

ஒரு மோட்டார் ஓட்டி தன் தோள்களின் பேரில் தன் காதலியின் கையைப் போட்டுக் கொள்ள அனுமதித்தால் 1வி 3பெ அபராதம்.

அவன் தன் காதலியின் கழுத்தில் கை போட்டு அணைத்துக் கொண்டால் 2வி 6பெ அபராதம்

முத்தமிட்டால் 5வி அபராதம்

காதல் கொண்ட மோட்டார் ஓட்டி, எந்தப்பொலீஸ்காரரால் கண்டு பிடிக்கப் படுகிறானோ. அவரிடம் நேரில் அபராதத் தொகையைக் கொடுத்துவிட வேண்டும்.

மாடின் பத்திரிகை காதல் கொண்ட மோட்டார் ஓட்டிகளால் அநேக அபாயங்கள் நேரிடுகின்றன வென்றும், அவர்களுடைய கவனம் மாறுபட்டு விடுகிறதென்றும் விபரமாய் எழுதுகிறது.

---

### அயர்லாந்து செய்தி

அலகபாத் மே 2உ

சுபாஷ் போஸ் கைது சம்பந்தமாக பண்டித ஜவஹருக்கு அயர்லாந்திலுள்ள இந்திய ஐரிஷ் சுயேச்சைச் சங்கத்தலைவர் திரு. எம். கே. பிரிட்ஜ் அனுப்பியிருக்கும் செய்தியாவது:—.

ஸ்ரீ சுபாஷ் போஸை இந்திய சர்க்கார் கைது செய்திருப்பதைப்பற்றி இச்சங்கம் மிகுந்த ஆத்திரமடைந்திருக்கிறது. இவ்விபரத்தைத் தெரிவித்துக்கொள்வதோடு பிரிட்டிஷ் சர்க்காரையும் அதன் சகல நடவடிக்கைகளையும் இச்சங்கம் கண்டிக்கிறது."

### காதலால் மதமாற்றம்?

கொழும்பு மே 6

உள்நாட்டிலுள்ள ஒரு சாப்பாட்டுக் கடையில் தங்கியிருந்த தமிழ் நாவிதன் காதலின் நிமித்தம் மகம்மதியனாக மாறினானாம். அதன் பயனாக அவன் தன்னுடைய மயிர் கத்தரிக்கும் கடையையும் இழக்க நேரிட்டதாம். எனினும் பொது ஜனங்கள் மேற்படி காதல் பேர்வழியின் மீது இரக்கங் காண்பித்து அவனுக்கு ரூபா 35 ஐ நன்கொடையாகச் சேகரித்துக் கொடுத்தனராம். அவன் அதைக் கொண்டு மீண்டும் தனது கடையை ஸ்தாபித்துத்தனது மயிர் நீக்கும் நுட்பத்தை தன்னுடைய மதத்தினருக்கே உபயோகப் படுத்துவதாகக் கருதியிருக்கிறானும்.

---

### மரத்தடியில் மகாத்மா

வார்தாசஞ்சு மே 2

நேற்று மூன்றினம்காலை மகாத்மா காந்தி வார்தாவுக்கு ஐந்து மைல் தூரத்திலுள்ளமிகச் சிறு கிராமமான பெகேயானுக்கு நடந்து சென்று தமது புதிய வாசஸ்தலத்தை நிர்ணயம் செய்து கொண்டார். அங்கு மகாத்மா காந்தியின் குடிசை இன்னும் தயாராகவில்லை. ஆகையால் ஓர் மர நிழலில், படல்களே சுவரால் கூரை வேய்ந்த ஒரு கொட்டகையில் அவர் வசித்து வருகிறார். இம்மாதம் மூன்றாவது வாரம் வரையில் மகாத்மா அங்கேயே வசித்து வருவார். கிராமாபிவிருத்திச் சங்க ஆதரவில் ஏற்பாடு செய்யப் பெற்றுள்ள கண் காட்சியை ஆரம்பித்து வைப்பதற்காக, இம்மாதம் மூன்றாவது வாரம் வார்தாவுக்கு வருவார். மறுபடி 27 ம் தேதியன்று மற்றோர் வைபவத்திற்கு வருவார். இவ்வாறே அவர் கிராமத்திலிருந்து வந்து போய்க் கொண்டிருப்பாரானைடால் அவரது முக்கியவாசஸ்தலம் எப்போதும் கிராமமாகவே இருக்கும்.

---

### கொழும்பில் சீன பொக்கிஷம்

கொழும்பு மே 6உ

நேற்றுக்காலை பி அன்டு ஓ ரான்பூரா என்னும் கப்பல் கொழும்பு துறைமுகம் வந்துசேர்ந்தது. இக்கப்பல் சீன தேசத்து புராதனப் பொருள்கள் பலவற்றை ஏற்றிக் கொண்டு சீனாவிற்குச் செல்லுகிறது இந்த சீனப்பொக்கிஷப் பொருள்கள் கடந்தவருடம் பிரிட்டிஷ் யுத்தக்கப்பல்கள் மூலம் பிரிட்டனுக்குக் கொண்டுசெல்லப் பட்டவைகளாகும்.

## அடிஸ அபாபாவில் அல்லோலகல்லோலம்

### எங்கே பார்த்தாலும் கொலையும் கொள்ளையுமாகவே இருக்கின்றன

#### சக்கரவர்த்தி பிரான்சிய சோமாலிலாண்டில் ஒதுக்கிடந் தேடினர்.

3-5-36.

"இன்னமும் நாம் இங்கே தங்கினால் உயிருக்கே ஆபத்து வரும், இறந்தால் நம் நாட்டை மீட்பதற்கு யாதுஞ்செய்தல் முடியாது; ஆதலால் இப்போதைக்கு நாம் நம்முடைய நாட்டை விட்டு நீங்குவதே நல்லநெறி" என நிச்சயித்துக் கொண்டு கண்களில் நீர் ததும்ப "பிரான்சிய தானாபதியிருக்கும் இடத்திற்குப்போய் நாம் நாட்டைவிட்டுப் போவது புத்தியாகுமோ? அதனாற் குறையில்லையோ? என்று ஸ்தானாபதியைக்கேட்க, இந்தச் சமையத்தில் தப்பிப்போவதுதான் புத்தியாகுமென்றும் தங்கள் சோமாலிலாந்திலுள்ள டிஜிபொத்தி யென்னுமிடத்திற் போய்த் தங்கலாமென்றும் அந்தத் தானாபதி தெரிவித்தாராம். தலைநகரைவிட்டுப் போவதற்கு முன் சக்கரவர்த்தி அங்குள்ள பிருத்தானிய ஸ்தானாபதியோடும் யோசித்தாராம்.

சக்கரவர்த்தி தம்முடைய சக்கராதிபத்தியத்தைத் தாம் போகும்போது தம் மந்திரிமார் கையில் ஒப்புவித்துவிட்டே போனாராம். சக்கரவர்த்தி குடும்பத்தோடு தம் தலைநகரை அதிகாலையில் விட்டுப் புகைரதமார்க்கமாக பிரான்சியருக்குரிய டிஜபோத்தி நகரை யடைந்தனர்.

புகைரத மார்க்கமாகச் சக்கரவர்த்தி அயிச்சா என்னுந் தானத்திற் கணித்தாகப் போகும்போது அவருடைய சேனாவீரருள் 50 வீரர் அவரை எதிர்கொண்ட அவர் கண்களில் நீர் ததும்ப அவர்களுக்கு விடைகொடுத்து அப்பாற் போயினராம். ராஸ்ஹயிலோ என்னும் தேசாதிபதியை அரசதுரோகஞ் செய்தாரென்னுங் குற்றச் சாட்டில் 1930-ம் ஆண்டிற் சிறைப்படுத்திய சக்கரவர்த்தி இப்பொழுது அவரை மன்னித்து விடுதலை செய்து விட்டுத்தானும் போகின்றார்.

---

#### இறங்குந் தானத்திற் பிரான்சியர் உபசாரம்.

சக்கரவர்த்தியும் குடும்பத்தினரும் பரிவாரமும் டிஜிபொத்தியில் இறங்கியபோது அங்குள்ள பிரான்சிய தேசாதிபதியும் உத்தியோகத்தர்களும் அவர்களை அரசவரிசையான உபசாரத்துடன் வரவேற்றனர். இருமருங்கும் பிரான்சிய மெய்காப்பாளர் நிரையே நின்றனர். புகைரத ஸ்தானத்திலே சக்கரவர்த்தியையும் குடும்பத்தினரையும் ஏற்றிச் செல்வதற்குப் பாதுகாப்பொடு கூடிய மோட்டார்கள் முந்தியே வந்து நின்றன. அவைகளில் அவர்கள் எல்லாரும் ஏறிக்கொண்டு பிரான்சிய பாதுகாவற் பரிவாரத்துடன் தேசாதிபதியின் மாளிகையை அடைந்தனர். சக்கரவர்த்தியையும் குடும்பத்தினரையும் ஒரு இத்தலியன் நிழற்படமெடுக்க முயன்ற போது அவனை அடித்துப் படம் எடுக்காதபடி காவலாளர் செய்துவிட்டனராம்.

---

#### அபிசீனிய மந்திரிமாரின் செயல்.

அடிஸ்அபாபாவில் இருந்தமந்திரிமாரும் ஏனைய உத்தியோகத்தர்களும் தாங்கள் அங்கு நிற்பின் அபாயம் என உணர்ந்து இராச்சியத்திற்காகிய வரிசைப் பொருள்களையும் பழைய பொருள்களையும் எடுத்துக்கொண்டு பட்டினத்தைவிட்டு, தலைநகருக்குத் தென்மேற்குத் திசையில் 60 மைல் தூரத்திலுள்ளதாகிய கோறியென்

#### அபிசீனிய சக்கரவர்த்தி கப்பலேறினர்.

4-5-36.

அபிஸீனிய சக்கரவர்த்தி தம் குடும்பத்துடனும் பரிவாரத்துடனும் இன்று பின்னேரம் 5½ மணி வரையில் பிருத்தானிய யுத்தக் கப்பலாகிய H. M. S. "என்ரர் பிறைஸ்" மூலமாக டிஜிபொத்தியிலிருந்து புறப்படலாயினர். ஹெயிவா என்னுமிடத்திற்குக் கப்பல் போகின்றதாம்.

சக்கரவர்த்தி குடும்பத்துடன் தலைநகரை விட்டு நீங்கினர் என்று நிச்சயமாக அறிந்தவுடனே பட்டினத்திலுள்ள நாட்டாமட்டிகள், சிதைந்த பட்டாளத்தில் எஞ்சி நின்றவர்கள், குடிகாரர் எல்லாரும் கூட்டங் கூட்டமாகக் கொள்ளையடிக்கவும், கட்டடங்களை வீடுகளைத் தீக்கிரையாக்கவும் தலைப்பட்டனர். கொள்ளையடிக்குஞ் சமையத்திலே பல வீடுகள் க்ஷேமநிதி வங்கிகள் தீக்கிரையாயின; பலர் ஆண்கள் பெண்கள் என்ற பேதம்பாராது கொல்லப்பட்டனர்; இன்னும் பலர் சிவமோசமான ஊறடைந்தனர்; வெந்த வீட்டிற் பிடுங்கியது ஆதாயம் என்ற நியாயம் எங்குங் காணப்பட்டது; சக்கரவர்த்தியின் புராதனமான மாளிகை சுவாலித்தெரிந்தபடி காணப்படுகின்றது; பரிசுத்தமான ஆலயங்கள் இருந்த இடத்தில் நெருப்புச் சுவாலையே காணப்படுகின்றது. பிரான்ஸிய அமரிக்க ஏனைய அந்நிய ஸ்தானாபதிகளின் ஸ்தானங்களையும், ஸ்தானாபதிகளின் காவற்படைகளையும் கொள்ளைக்காரர் தாக்கினர்; பிருத்தானிய ஸ்தானாபதியின் ஸ்தானமே கலகக்காரர் தாக்கிய போது நின்றுபிடித்தது. பிருத்தானிய ஸ்தானாபதியின் காவற்படைகள் கலகக்காரரைத் தாக்கிப் புறங்கண்டு ஏனைய அந்நிய ஸ்தானாபதிகட்கும் அவர்களைச் சேர்ந்தவர்களுக்கும் ஒதுங்க இடங் கொடுத்தனர். மூன்று நாட்களாக அங்கே நடந்த அக்கிரமங்களைச் சொல்ல நா எழாதாம்; எழுதக் கை கூசுகின்றது. இவைகளையெல்லாம் சகிக்க முடியாமல் அடிஸ்அபாபாவிலுள்ள பிரான்சிய தானாபதி, இத்தலிய சேனாபதிக்கு சீக்கிரம் வந்து பட்டினத்தை ஏற்றுப் பாதுகாக்கும்படி சமாசாரம் அனுப்பியிருக்கின்றார். அவர்களும் வேகமாக வருகின்றார்கள்.

5-5-36.

அபிஸீனிய சக்கரவர்த்தி 117பரிவாரங்களுடன் "என்ரர்ப் பிறைஸ்" என்னும் பிருத்தானிய குரூயிசர்க் கப்பல் மார்க்கமாகப் பலஸ்தைனின் நகருக்குப்புறப் பட்டுவிட்டார். அவருக்குப் பிரியாவிடை சொல்லும்படி பல அபிஸீனியரும், சுவீடின் நாட்டு உத்தியோகத்தரும் அங்கே வந்து நின்றனர். ராஸ்கெயிற்றச்சோ, ராஸ்காசா என்னுமிவர்கள் பிரான்சிய தேசாதிபதியின் மாளிகையிற் காணப்பட்டனர். சக்கரவர்த்தியும் இராணியும் பிள்ளைகளும் பிரான்சிய தேசாதிபதியின் மாளிகையை விட்டுப் புறப்படும்போது பெரும் பரிதாபமான காட்சியாக விருந்ததாம். சக்கரவர்த்தி தம் குடும்பத்தினரைப் பலஸ்தைனில் விடுத்துத் தாம் லண்டனுக்கு மீண்டு செல்வாரென்று சொல்லப்படுகின்றது.

### புத்தர் பிறந்த தினம்.

#### யாழ்ப்பாணத்திலும் விசாக கொண்டாட்டம்.

இமயமலைச் சாரலில் மணிமுடி தரித்துச் செங்கோலோச்சிய சுத்தோதன மன்னனுக்கு இற்றைக்கு 2576 ஆண்டுகளுக்கு முன், ஓர் ஆண் குழந்தை பிறந்தது. இக்குழந்தையே புத்தபகவானவர். இவர் பிறந்தது வைகாசி விசாகதினமாம். இவர் மெய்ஞ்ஞானம் பெற்ற தினமும் அதுவேயாம். நிருவாணம் அடைந்த தினமும் அதுவேயாம். ஆகவே இத்தினம் புத்த சமயிகளுக்கு மிக்க மேம்பாடு பொருந்திய ஒரு தினமாகும். இத்தினம் ஏப்பிரல்மீ 5-ந் திகதி இலங்கையின் நாலு பக்கங்களிலும் உள்ள பௌத்த சமயிகளால் வெகு விமரிசையாகக் கொண்டாடப் பெற்றது இது உலகினர்க்கே ஒரு சிறந்த தினம் என்றும் கூறலாம். இத்தினம் யாழ்ப்பாணத்தில் உள்ள பௌத்தாலயத்திலும் மிக்க சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது.

---

### இத்தலிய சேனாபதி தலைநகருட் பிரவேசித்தல்.

இந்த யுத்தத்தைத் தலைமை வகித்து நடத்திய இத்தலிய சேனாபதியாகிய மார்ஷல் படக்லியோ தமது பரிவாரங்களுடனும் சைநியத்துடனும் ஒரு வெள்ளைக் குதிரையின் மீது ஏறி அடிஸ் அபாபாவிற் புகுந்தனர். அன்று பின்னேரம் 25,000 இத்தலிய போர்வீரர் தலைநகருட் பிரவேசித்தனர்.

---

### முஸோலினியின் ஆரவாரம்

ரோமபுரி 5-5-36

முஸோலினி தமதுசனங்களெல்லாரும் அதிர்ந்து மகிழும்படி இத்தலியர் அபிஸீனிய தலைநகரைப் பிடித்துவிட்டனரெனத் தெரிவித்தாராம். ரோமபுரியிலும் இத்தலிய நாடு எங்கணும் நடக்குங் கொண்டாட்டங்கட்கும் ஆரவாரங்கட்கும் ஒரு எல்லையில்லையாம். "அபிஸீனிய நாடு இத்தலியரின் பராக்கிரமத்தாற் பிடிக்கப்பட்டது; எவ்வளவு வலிமையோடு இந்தப் பெரிய தேசத்தைப் பிடித்தோமோ அவ்வளவு வலிமையோடு இதனைப்பாது காக்கவும் எங்களால்முடியும்; அபிஸீனியா இனி எக்காலத்தும் இத்தலியருக்கே உரியது; அபிஸீனியாவில்விரைவாக எங்கள் ஆணையைநிலைநிறுத்திவிடுதல் வேண்டும்" என்ற இப்படியான வார்த்தைகளை முஸோலினி அந்தச் சமையத்திலே தெரிவித்தாராம்.

### தானாவாவி யாருக்குரியது?

பிருத்தானியருக்கா? இத்தலியருக்கா?

தானாநதி பிருத்தானியருக்கு உரியதென்று ஆங்கில பத்திரிகைகள் தெரிவித்தபோது, இத்தலிய அதிகார பத்திரிகையொன்று "அப்படியன்று, அந்நதி இதுகாறும் அபிஸீனியர் பொறுப்பிலிருந்தது; அதனை அவர்களிடமிருந்து இத்தாலியர் பிடித்துவிட்டமையால் இனிமேல் இத்தலியருக்கே அது சேர்ந்ததாகும்" என்று தெரிவிக்கிறதாம். உடையவனிற் கைப்பற்றியவன் பெரியவ னல்லவா?

சகாய விலை

## சிறந்த தேக்கமரங்கள்!

இந்த மேமாசம் 4-ம் தேதிதொடக்கம் 31-ம் தேதி முடிய குறைந்தவிலை.

பெருந்தொகையான தேக்கமரங்களை நாங்கள் விரைவில் இறக்குமதி செய்யவேண்டியிருப்பதால், இப்பொழுது இங்குள்ள சிறந்த ரங்கூன்சீயப் தேக்கமரங்களையெல்லாம், மேலே காட்டப்பட்ட தேதிகளுக்கிடையில் குறைந்தவிலைக்கு விற்பதற்காகிய ஒழுங்குகள் செய்துவிட்டோம்.

இந்த அருமையான சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள்.

S. வீரகத்திப்பிள்ளை & ஸன்ஸ்
தேக்கமர ஓடு வியாபாரிகள்.

# வெள்ளையர் ஆட்சிக்குச் சனிதிசை ஆரம்பமா?

## எல்லாரும் விரும்பும் சமஅந்தஸ்து

## கறுப்பு மக்களும் உணர்ந்து தமது உரிமையைப்பெற ஆரம்பித்துவிட்டனர்

(நீர்கொழும்பு திரு. W. S. சார்லிஸ் பேர்ணண்டோ)

நாம் வசிக்கும் இப் பூமண்டலத்தின் மொத்த விஸ்தீரணம் 5 கோடியே 30 லெட்சம் சதுரமைல். இதில் 4 கோடியே 70 லெட்சம் சதுரமைல்கள் விஸ்தீரணமுள்ள பூமிப் பரப்பு வெள்ளை நிறம் உள்ள ஐரோப்பிய ஜாதியாரின் ஆதிக்கத்துட்பட்டு வருகின்றது. மீதியாயுள்ள 60 லெட்சம் சதுரமைலில் சிற்சில பகுதிகள் இன்னும் வெள்ளையரின் ஆட்சிக்கு உட்பட்டுவருகின்றன. ஆனாலும் 40 லெட்சம் சதுரமைல் விஸ்திரணமுள்ள தேசங்கள் யப்பானியர் சீனர் ஆகிய மஞ்சள் நிறத்தேசரின் ஆட்சியில் இருந்து வருகின்றது. 16வது நூற்றாண்டிலிருந்து வெள்ளையருக்குச் சுக்கிரன் உச்சத்திலிருந்து வருகிறான் என்று தான் சொல்லவேண்டும். நாகரீகம் என்னவென்று அறியாத காட்டுமிராண்டிகளும் காட்டு எருமைகளும் கூட்டங் கூட்டமாகச் சஞ்சரித்துவந்த ஆபிரிக்காவும் நாகரீக உலகத்தாருக்கு முன்னால் தெரியாத பிரமாண்டமான ஆபிரிக்காவும் இந்தியாவும் இன்று வெள்ளையருடைய ஆட்சியிலிருந்து வருகின்றது. அறிவின் நுட்பத்தினாலும் ஆராய்ச்சியின் முற்போக்கினாலும் நவ நவமாக இயற்றிவரும் இயந்திரசாதனங்களின் துணையைக்கொண்டு உலகத்தின் பெரும்பாகத்தை வெள்ளையர் ஆட்சிசெய்துவருகிறான். மூன்று நூற்றாண்டுகளுக்குஉள்ளாக பெரியபூமிப் பரப்பை வெள்ளையர் வசப்படுத்திக்கொண்டது ஆச்சரியப்படத்தக்க விஷயம். கற்றோர்க்குச் சென்றவிடமெல்லாஞ் சிறப்பென்று நாடோடியாகச் சொல்வார்கள். அதுபோல வெள்ளை நிறத்தவனுக்குச் சென்றவிடமெல்லாம் வெற்றியாகவிருக்கது. நாகரீகத்திற்குச் சிறந்த இந்தியனும் மிருகேந்திரனோடு எதிர்த்துப் போராடவல்லமை பெற்ற ஆபிரிக்காவாசிகளும் கருங்கல்லையும் உதைத்துத் தூளாக்கும் பராக்கிரமம் வாய்க்கச் செந்நிற இந்தியனும் வெள்ளைக்காரர்களின் துப்பாக்கிகளுக்குப் பயந்து சரணாகதியடைந்தார்கள். வெள்ளையரின் முன்னேற்றத்தை உலகத்தின் ஆயுளோடு ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, வெள்ளையரின் ஆதிக்கமும் முன்னேற்றமும் இமைப்பொழுதில் ஏற்பட்டனவென்று தான் சொல்லவேண்டும். மிகவுஞ் சொற்பகாலத்திற்குள்ளாக ஏற்பட்டுள்ள வெள்ளையரின் ஆதிக்கம் இன்னும்பல நூற்றாண்டுகள் நீடித்திருக்க முடியுமா? எவ்வளவு சடுதியில் வெள்ளையர் ஆட்சி பூமண்டலத்திற்கெல்லாம் வியாபித்ததோ அவ்வளவு விரைவில் அதுசிதறுண்டுவிடுமா? வெள்ளைக்காரனது அரசு நெடுங்காலமாக நிலைத்து நின்றால் மனிதவர்க்கத்திற்கு நன்மைகள் ஏற்படக்கூடுமா? என்ற பல திறப்பட்ட கேள்விகள் சென்ற மகாயுத்தத்தின்பின்னர் ஒவ்வொருதேசத்தாருடைய மனதினில் எழுந்திருக்கின்றன என்பது குறிக்கப்படவேண்டியதாகும். சென்ற மகாயுத்தம் உறங்கிக்கிடந்த கறுப்பு நிறத்தவர்களைத் தட்டி எழுப்பிவிட்டது. வெள்ளையரின் சிறுமையை அது பகிரங்கப்படுத்திவிட்டது. மகாயுத்த காலத்தில் ஆபிரிக்கா தேசத்துக காப்பிரியும் இந்தியநாட்டு வைதிகனும் மிருகங்களின் தோலை உடையாகக்கொண்டிருந்த செந்நிற இந்தியனும் இலங்கைத்தீவின் மலைகளின் நடுவே வசிக்கும் சிங்களவனும் வெள்ளையரோடு நெருங்கிப் பழகினார்கள். ஐரோப்பியனின் யோக்கியதை என்ன அவனுடைய வல்லமை எத்தகையது, ஐரோப்பிய ஜாதியாருக்குள்ள ஒற்றுமையின் திண்மை எத்தகையது என்பவைகளை நேரடியாகக் கறுப்பர் அறிந்துகொண்டார்கள். கேவலம் நிறத்திலுள்ள வேற்றுமை நீங்கலாக வேறொருவகையிலும் வெள்ளைக்காரன் நம்மைவிட உயர்ந்தவனல்ல என்ற உண்மையைக் கறுப்பு நிறத்தவன் நன்கு தெரிந்துகொண்டான். வெள்ளைச் சாதியாருக்கு ஒற்றுமை என்பது சிறிதளவேனும் இல்லையென்பதை மகாயுத்தத்திற்கும் பின் நடைபெறும் நிகழ்ச்சிகள் பகிரங்கப்படுத்திவிட்டன. ஒற்றுமையுடன் ஒருமுகமாகநின்று போராடினால் வெள்ளையரை இருக்கவிடக்கூடியாமல் விரட்டிவிடலாம் என்ற தன்னம்பிக்கையும் தைரியமும் கறுப்பு ஜாதியாருக்கு மிகுந்துவிட்டன. வெள்ளைக்காரனை வெல்ல ஆண்டவனாலும் முடியாது என்ற நம்பிக்கை கொண்டிருந்த ஆசியாக்கண்டம் இப்போது விழித்துக்கொண்டிருக்கின்றது. சின்னஞ் சிறு யப்பான் மிகப் பெரிய ருஷியாவை முழந்தாள் இட்டுப் பணியச் செய்யவில்லையா? இம்மட்டல்ல மகாயுத்த காலத்தில் நேசதேசங்களுக்கு நேர்ந்த நெருக்கடியைச் சமாளித்துக் கொள்வதற்காக கறுப்புநிறத்தவர்களின் தயவை எதிர்பார்த்தார்கள். மகா யுத்தத்தைத் தர்ம யுத்தமென்று கூறினார்கள். அடிமைப்பட்டவர்களின் விடுதலைக்காகவும் சுயநிர்ணயமென்ற கொள்கையை நிலைநிறுத்துவதற்காகவும் மிருக பலத்தைவிட நியாயமே தலைசிறந்ததென்ற உண்மையை மனிதவர்க்கம் மறந்துவிடாதிருக்கவேண்டுமென்பதற்காகவும் எந்நிறத்தவராயினும் எத்தேசத்தவராயினும் எல்லோரும் சகோதரர் என்றகொள்கை பூமண்டலத்தில் ஸ்தாபிக்கப்படவேண்டுமென்பதற்காகவுமே மமதை பிடித்த ஜெர்மனியரோடு நாம் யுத்தஞ் செய்கின்றோம். இந்தத் தர்மயுத்தத்தில் நீங்களும் சேர்ந்துகொள்ளுங்களென்று ஐரோப்பிய ராஜதந்திரிகள் கறுப்பரை ஆசைவார்த்தை சொல்லி அழைத்தார்கள். அன்று தானையா வெள்ளை நிறத்தாரின் ஆதிக்கத்திற்கு சனிதிசை ஆரம்பமானது. —(தொடரும்)

---

### விவாகம்.

இரத்தினம் - சிவக்கொழுந்து

உரும்பராய் ஆங்கில வித்தியாசாலையில் உபாத்தியாயினியாக அமர்ந்திருக்கும் ஸ்ரீமதி வ. எப். சிவக்கொழுந்துவுக்கும் உரும்பராயைச் சேர்ந்த திரு இரத்தினத்திற்கும் சென்ற வியாழக்கிழமைபன்று விவாகம் இனிது நிறைவேறியது.

---

### பல் வயித்தியர்.

டக்டர் வி. சின்னத்தம்பி யாழ்ப்பாணவாடிவீட்டில் ஆனிமாதம் 5ம் 6ம் 7ம் 8 திகதிகளில் இவ்வூரில் வருத்தக்காறருக்கு சிகிச்சை செய்ய ஆயத்தமாயிருப்பார்.

Mis. 18. 27-4 to 28-5-36.

---

## தேவை.

இந்துசாதனப் பத்திரிகைக்கு ஒரு உதவியாசிரியர் தேவை. அவர் பத்திரிகை நடாத்தும் முறையில் நல்ல அநுபவம் வாய்ந்தவராயும் ஆங்கிலத்திலுள்ள விஷயத்தைத் தமிழில் மொழிபெயர்க்கவும் அப்படியே தமிழை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கவும் வல்லுநராயும், நுட்பமாகப் பிழைதிருத்தக் கூடியவராகவும் சைவசமயத்தவராயும் இருத்தல் வேண்டும். இப்போதைக்கு மாத வேதனம் ரூபா 40. விருப்பமானோர் தம்மிடத்துள்ள தாதரப்பத்திரங்களுடன் எமக்கு விண்ணப்பப்பத்திரம் 15-5-36க்கு முன் அனுப்பவும்.

C. A. கந்தப்பசேகரம்.
கௌரவ காரியதரிசி.

சைவபரிபாலனசபை,
வண்ணார்பண்ணை.
28—4—36

---

# செந்தமிழ் நூல்கள் கூறும் ஐந்திணை அமுதம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி.)

"யாயும் யாயும் யாரா கியரோ?
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்?
யானும் நீயும் எவ்வழி அறிதும்?
செம்புலப் பெயல்நீர் போல
அன்புடை நெஞ்சந் தாங்கலந் தனவே"
—குறுந்தொகை, 40

என்னும் தலைவியினது கூற்றால் உள்ளவாறு உணரலாம்.

மேலும்,

"தொடுப்பினுங் குலையமையும் குடிநிரல் உடைமையும்
வண்ணமும் துணையும் பொரீஇ எண்ணு(அ)
எமியேன் தனித்த வருஞ்சால் அருவினை"
—குறிஞ்சிப்பாட்டு, 30–32

என்னும் அடிகளாலும், 'உயிர்க்குப் பாதுகாவலாகிய அருவினை' என்றே பண்டைத்தமிழர் தம் களவு ஒழுக்கத்தைக் கொண்டிருந்தனர் என்பது இனிது புலனாகும்.

பாலையின் பண்பு

களவில் தலைவி தலைவனோடு உடன்போக்கு வைத்துக் கொள்ளும்போதும், தலைவியை விட்டுத் தலைவன் பிரிந்திருப்புழியும் உண்டாகும் பிரிவு 'பாலை' எனப்படும். தலைவன் பிரிவால் தலைவி கல்லியல்பு இழந்து கடுங்கு துயர் உறுத்திருப்பாள். அவளின் இந்நிலைமை பாலைநிலத்துக்கு ஒப்பாக்கப்பட்டது. "என் தலைவன் அடிக்கடி என் கண்களையும், தோள்களையும், என் கூந்தலையும், ............ ............பாராட்டி நேற்றுவரை இவண் இருந்தான்; இன்று பிரிந்தான்; அவன் மரங்களற்ற பாலைநிலத்துக்குச் சென்றான். அந்நிலமோ, கடல் போலப் பரந்து; பேய்த்தேரைத் தண்ணீர் எனமான் அருந்தச் செல்லும் தமையுடையது" என்று தலைவி வருந்துவதாகக் கீழ்வரும் செய்யுளால்உணரலாம்.

"கண்ணும் தோளும் தண்ணறுங் கதுப்பும்
.........பலபா ராட்டி
நெருநலும் இவணர் மன்னே; இன்றே
பெருநீர் ஒப்பிற் பேஎய் வெண்தேர்
மானின் நிரைபட மானசை உறுஉம்
கடுமட் டசும்பின் மதநா றின்ற
பிறவா வெண்ணெ யுருப்பிடத் தன்ன
உவரெழு களரி ஓமையங் காட்டு
வெயில்வீற் றிருந்த வெம்பலை அருஞ்சுரம்
ஏகுவர் என்ப தாமே தம்வயின்
இரந்தோர் மாற்றல் ஆற்றா
இல்லின் வாழ்க்கை வல்லா தோரே."
—நற்றிணை, 84.

இப்பாவால் உண்மைக் காதலின் உள்ளம் இற்றென இனிது விளக்கக் காணலாம்.

முல்லையின் முறைவல்

தலைவனது சிறப்பிரிவில் மனைவி ஆற்றியிருத்தல் 'முல்லை' என்பது ஏனைய நிலங்களைவிட முல்லைநிலப் அழகானது, முல்லை மலர் மாலைக்காலத்தில் முறுவல்செய்வது போலத் தலைவியை நோக்கி மலர்கின்றது. முல்லைநில மக்களாகிய கோவலர் தம் கன்றுகாலிகளை வீடுகட்கு ஓட்டிக் கொண்டு வருங்காட்சி கண்டு இன்புறத் தக்கது. வெளியிடஞ் சென்று மீளும் காளைகளும், முல்லையந் தீங்குழலும், முல்லை மலரும், தலைவிக்குப் பிரிந்துபோன தலைவனை நினைப்பூட்டுகின்றன. அன்ன பொருள்களைக் காண்கையில் தலைவி தலைவனை நினைந்து வருந்துகின்றாள். தலைவி தோழியை நோக்கி,

"எல்லை கழிய முல்லை மலரக்
கதிர்சினந் தணிந்த கையறு மாலை
உயிர்வரம் பாக நீந்தினம் ஆயின்,
எவன்கொல் வாழி தோழி!
கங்குல் வெள்ளம் கடலினும் பெரிதே."
குறுந்தொகை, 387,

என்று கூறுவதாகவுள்ள செய்யுள் தலைவனது பிரிவால் அவர்கட்கு உண்டான எளிய நிலையை எழிலுறக் காட்டுகின்றது. இங்ஙனமே பிரிந்து மீளும் தலைவன் தனபாகனை விளித்து, "பாக, என் மகனுக்குக் கதைகள் கூறுபவளும் ............ ஆகிய என் காதலிக்கு எனது தாள்கள் (விரைய அவளை அடைதற்கு) வருகின்றன எனக் காக்கைகள் என் வருகையை முன்னமே உணர்த்தியிருக்குமா?"

"தோள்வலி யாப்ப ஈண்டுநம் வரவினைப்
புள்ளறி வுறீஇயின கொல்லோ? தெள்ளிதின்
காதல் கெழுமிய நலத்தள்; ஏதில்
புதல்வற் காட்டிப் பொய்க்கும்
..............தேமொழி யாட்கே"
—நற்றிணை, 161.

என்று உள்ளத்தில் ஓருவாராலும் உரை செய்ய அரியதொரு காதல் பெருக்கால் கடாவும் கடாவினை நோக்குங்கால், தலைவன் தலைவி பால் கொண்டொழுகும் தலையளி இன்னதன்மைத் தென்பது இனிது விளங்கும். (வரும்)

---

## நாட்டுப் பொருள் அபிவிருத்தி.

[ வரையறுக்கப்பட்டது ]

மூலதனம் ரூபா 30,000.

100 ரூபாகொண்ட 300 பங்குகள் உடையது.

பிரதான நோக்கமாகிய நெற்செய்கை சுன்னாச்சி நீர்ப்பாய்ச்சற்பகுதிகளில் நடந்துவருகிறது.

பங்கு ஒன்றுக்கு ரூபா 10 விகிதம் பத்துமாதங்களில் கொடுக்கலாம். பங்குத்தொகை மொத்தமாகக் கொடுப்பவருக்கு நூற்றுக்கு ஐந்து கழிவு. நீர்ப்பாய்ச்சற் பகுதி வேளாண்மை காணேற வருவாய் ஏறிவருவது தெளிவாயிற்று.

அதிக ஆதாயந் தருவது! பங்குக்கு முந்துங்கள்!!

யாழ்ப்பாணம் திருநெல்வேலி வ. சோமசுந்தரம்
,, கந்தரோடை வித்தியாசாலை மனேச்சர் சி. கந்தையா
,, நல்லூர் ஆசிரியர் வி. முத்துக்குமாரு M. A.

ஆகியோரிடம் பங்குகள் பெறலாம்.

ஆரம்ப கருத்தாக்கள்:—

Dr சி. சுப்பிரமணியம் Retired Prov. Surgeon.
R. R. நல்லையா J. P. யா. ந. ச. தலைவர்.
சி. முத்துவேலு J. P. கொக்குவில் கிராமச்சங்கத் தலைவர்.
K. தம்பிப்பிள்ளை வித்தியாசாலை மனேச்சர் காங்கேசன் துறை.
ஆ. மாணிக்கம் விஞ்ஞான சாஸ்திர ஆசிரியர், ஸ்கந்தவரோதயக் கல்லூரி கந்தரோடை.

(H 192. 6-11-35 to 5-5-36) (வி)

---


# N. வைத்திலிங்கம் & கம்பெனி

பெரியகடைத்தெரு, யாழ்ப்பாணம்

கட்டிடங்களுக்குவேண்டிய முதல்தரமானசாமான்கள் ஜெர்மனி, ஜப்பான், டச்சு முதலியவிடங்களிற்செய்யப்பட்டஉத்தரவாதமுள்ள சிமெந்துவகைகள், இரும்புச் சாமான்கள் வர்ணங்கள், வார்ணிஸ், கொழுக்கி ஓடுகள் இன்னும் கட்டிடத்திற்குரிய சகல சாமான்களும் எப்பொழுதும் விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன. கட்டிட வேலைகளைப்பற்றி எங்களிடம் யோசித்தால் சகாயமும் சௌகரியமும் கிடைக்கும்.

HEAD OFFICE:
38, 3rd Cross Street, Colombo — Telephone No. 30.

(Y. 56. 8-2—7-2-37) வி


---


# இந்தியன் வங்கி லிமிற்றெட்

ஸ்தாபிதம் 1907] [வரையறுக்கப்பட்டது.

| தலைமை ஆபீஸ் | யாழ்ப்பாணக் கிளை ஆபீஸ் |
| --- | --- |
| சென்னை (மெட்ராஸ்) | (பெரிய கடை) |

பொன் நகை, தானயவகை இவைகளின் ஈட்டில் சகாயமான வட்டிக்குக் கடன் கொடுக்கப்படும். எல்லாவகையான பணக் கொடுக்கல் வாங்கல் விஷயங்களும் இங்கே செய்து கொள்ளலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை யாழ்ப்பாணம் மானேஜரிடம் அறிந்து கொள்ளலாம்.

Q 290. 9-3 to 8-6-36 வி


---

## பொறுத்த விறப்பினை யென்று மதவணை மறந்த லதனினு நன்று

---


## சிவன் வேட்புத் தைலம்.

செம்மேகம், சுருமேகப் பத்தக்கள், குஷ்டம், குறைநோய், அரிப்பு, தடிப்பு, சொறி, கரப்பான் புண்களும்; விஷக்கடிகள் மேகரணம், கக்கூன்பத்துக்கள், சொறிகிரங்குதல்; கைகால வலி, குடைச்சல் பிடிப்புவலி முதலிய ஆறு ரோகங்கள்; அண்டவாதம் கண்டமாலை, அரையாப்பு, பௌத்திரம், விக்கப்புற்று ரணங்களும் ஆச்சரியமாய் குணமாகின்றன. வெறல், பதறி, ரணங்களுக்கு இதை மேலுக்குப் பூசலாம்.

12நாள் புட்டி விலை ரூபா 2. 3 புட்டிவரை தபால் செலவு சதம் 75.

நீரழிவைக் கைவிடப்பட்ட கொடிய ரோகங்களெல்லாம் இதனால் ஆயிரக்கணக்கில் குணமாகிவிட்டன.

### தாளக பஸ்பம்.

இருமல், இளைப்பு, கஷ்டசுவாசம், சயக்கட்டி, கோழை, சுரம், உடம்பு அனலாயிருத்தல், ஆகிய ரோகங்களையும், மூக்கில் நீர்வடிதல், ரத்தம், சொறி விழுதல், மூக்கடைப்பு, வாயில் நீரூறல், இளைப்புத் தோன்றல், பித்தம், ஆகிய பீனிசரோகங்களையும் கண்டிப்பாய்க் குணம்செய்கிறது.

### இருமல், இளைப்பு சுகம்.

என்னைப் பத்துவருஷமாய்த் தவப்பதித்த இரத்தகாசம், கபத்துடன் இரத்தம் விழுதல், அசாத்திய, நான்தவறுக இருமல் எல்லாம் தங்கள் "தாளக பஸ்பம்" சாப்பிட்டதில் இன்றுடன் 8 நாளில் கடவுள்கிருபையால் நல்ல சுகம்.

(Sd.) அ. செ. செய்யது இப்ராஹிம், திருக்கோணமலை.

தாளக பஸ்பம், அனுபானம், தாளிசபத்திரி சூரணம் உட்பட 20 நாள் மருந்து ரூபா 12-50.

குறிப்பு:— வெளிநாட்டார் ரூபா 5 அட்வான்ஸ் அனுப்பவும்.

தண்டபாணி வைத்தியசாலை, பழனி.

(Q 19. 27-4 to 26-7-36) வி (PALNI. S. I.)

# இந்திய அரசியல் நோய்

## உண்மையை அலக்ஷியஞ் செய்யக் கூடாது

### இலக்குமணபுரிக்காங்கிரஸைப்பற்றி ஸ்ரீமான் பரீந்திர குமாரகோஷ் கருத்து

[இலக்குமணபுரிக் காங்கிரஸைப்பற்றி ஸ்ரீமான் பரீந்திர குமாரகோஷ் ஒருவாறு கருதுகிறார். அவர் கருத்து வருமாறு:—

இந்தியாவில் மிகவும் பிரதிநிதித்துவமான ஸ்தாபனம் காங்கிரஸே; முற்போக்கான புத்தியும், கல்வி அறிவுமுள்ளவர்கள் அதில் சேர்ந்திருக்கிறார்கள்; சாமான்ய ஜனங்களும் அதில் ஓரளவு சம்பந்தமுள்ளவர்களாக இருக்கிறார்கள்; இந்தியாவில் தேசிய கவர்ன்மெண்டு ஏற்படும் வரை தேசத்தின் எதிர்கால நிலையை வகுக்கும் ஸ்தாபனமாக அதுவே இருந்துவரும். வகுப்பு உரிமைகளுக்கு அது ஒன்றிலேயே இடமில்லையாதலால், அது உண்மையான தேசிய ஸ்தாபனமாகும். இருந்தாலும் சாமான்ய ஜனங்களின் மனதைக் கவர்ந்து, அவர்களுடைய பிரதிநிதி ஸ்தாபனமென்று சொல்லிக்கொள்ளக்கூடிய நிலையை அது இன்னும் அடையவில்லை. அந்த நிலைமையை அது அடையும்போது அதை எதிர்த்து நிற்க ஒருவராலும் இயலாது.

ஆனால் காங்கிரஸானது அனுபவ சாத்தியமான, ஒரே வழியினதான வேலைத்திட்டத்தை ஏற்படுத்திக் கொள்ளும்வரை அந்த நிலைமையை அது அடைய முடியாது. தேசத்தின் முடிவான லக்ஷியத்தைத் திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டிருப்பதில் பயனில்லை. அந்தத்தொலைவிலுள்ள லக்ஷியத்திலேயே கவனத்தைச் செலுத்திக் கொண்டிருந்தால் நமது ராஜ்ய திருஷ்டி மழுங்கிவிடும்; நிகழ்கால அம்சங்களை நாம மறந்து விடுவோம்; பல படிகள் இடையே யிருப்பதையும் அலக்ஷியம் செய்து விடுவோம்; அந்தப்படிகளை அலக்ஷியம் செய்வது புத்திசாலித்தனமாகாது.

#### புதிய தலைவர்கள் வேண்டும்

நமது தலைவர்களில் பலர் கிளர்ச்சியிலும் தேசாபிமான உணர்ச்சியிலும் தோய்ந்து போயிருப்பதால் அனுபவசாத்தியம் எது என்பதையே அவர்கள் கவனிப்பதில்லை. விஷய விவரங்களை அவர்கள் அதிகம் கவனிக்காதவர்களாக இருப்பதால், பூரண சுயராஜ்யத்தை, பல கஷ்டங்களைக் கடந்தே, மிகுந்த எதிர்ப்பையும் மீறி, அடையவேண்டியிருக்கிறதென்பதை மறந்து விடுகின்றனர். இடையே வேலிகள் பல இருக்கின்றன. அந்நிய நாட்டாரே அந்த வேலிகளைப் போட்டிருக்கிறார்களென்று சொல்லிவிடுவதற்கில்லை. நம்மவரே போட்டுள்ள வேலிகளும் பலவுள. சிலவற்றைச் சாமர்த்தியமாகக் கடக்கவேண்டும். சிலவற்றில் தலையிடாமல் ஒதுங்கியிருக்கவேண்டும். யதார்த்த ராஜ்ய அறிவும், தீர்க்க திருஷ்டியுமுள்ள ராஜ்ய வாதிகளே இந்தக் காரியங்களைச் சாதிக்கலாம்.

தேசத்தில் ராஜ்ய உணர்ச்சியைக் கிளப்பி விடுவதற்காக் கிளர்ச்சி செய்யுங்காலம் மலையேறிவிட்டது. ஒவ்வொரு கல்லாய் அழுத்தமாக அஸ்திவாரத்தைப் போடவேண்டிய கடினமான கட்டம் வந்திருக்கிறது. ஆகவே, எதிர்ப்பையும் சமாளித்துக் கொண்டு காரியத்தை நிறைவேற்றி வைப்பதற்கு சமர்த்தர்களான புதிய தலைவர்கள் வேண்டும். ராஜ்ய சமூக, பொருளாதார விஷயங்களில் காங்கிரஸ் அனுபவ சாத்தியமான நிர்மாண வழியைக் காட்டத் தவறி விட்டது. அதனால் அந்நிய நாட்டு அதிகாரி வர்க்கக் கவர்ன்மெண்டும் கால நிலைமைகளுக் கேற்றவாறு நடந்து வந்தது. காங்கிரஸ் தலைவர்கள் காரியமற்றபேச்சிலும், விவாதத்திலும் காலத்தை வியர்த்தமாக்கிக் கொண்டிருக்கிறார்கள். காலமும் பணமும் தான் விரயமாகின்றன. காரியம் ஒன்றுமில்லை.

#### காங்கிரசின் தவறு.

அப்பொழுதப்பொழுது கிடைத்து வரும் பலன்களை உருவாக்கப் படுத்திக் கொண்டு மேல் படியில் பிரவர்த்திக்கும் தீர்க்க தரிசன முள்ளவர்கள் அற்ற ஸ்தாபனமாகக் காங்கிரஸ் ஆகி விட்டது. கவர்ன்மெண்டை எதிர்க்க வேண்டுமென்ற ஒரே கொள்கையுடன் காங்கிரஸிலுள்ளவர்கள் ஒன்று சேர்ந்தவர்கள் நிர்மாண வேலையிலேயே அவர்கள் புத்தி பிரவர்த்திக்கவில்லை. ஆகவே அதே கோஷ்டியினரை ஒரு திட்டத்தைத் தயாரிக்கச் சொன்னபோது அவர்களால் முடியவில்லை நம்பென்று லக்ஷியத்திற்குப் பாய்ந்துவிடலாமென்று அவர்கள் நினைத்தார்கள். பூரணசுயேச்சைக்கோ குறுக்குவழியில்லை. இந்தியாவின் பல கேடுகளுக்கு சுயேச்சை வந்தால் போய்விடுமென்ற அசட்டு நம்பிக்கையும் ஒழியவேண்டும். சுயேச்சை பெற்றுள்ள தேசங்கள் பல பிரச்சினைகளால கஷ்டப்படவில்லையா?

#### அசட்டு எண்ணம்.

விசேஷ உரிமையாளர்களை பலாத்காரத்தினாலேனும் ஒழித்தால்தான் சுதிமோட்சம் ஏற்படுமென்ற மற்றொரு தப்பு எண்ணமும் இருந்து வருகிறது. ஒத்துழையாமை மூலம் படிப்படியாக அதை ஒழிப்பது பலவீனத்துக்கு அறிகுறியென்று கருதப்படுகிறது. ஹிட்லர் தமது வாளால் இலங்கையை அழித்து விடலாமென்றுதான் நினைத்தார். அது முடிந்ததா? இல்லை. அவ்விதந்தான் அவசரப் பட்டாலும், பெரிய லட்சியங்களைக் கிரகித்துக்கொள்ள அதிக காலமாகுமென்பதை இந்தியவும் இந்தியத் தலைவர்களும் உணரவேண்டும். போகப்போக ஏற்கனவே அடைந்துள்ள வெற்றிகளை ஸ்திரப்படுத்திக் கொண்டு போகவேண்டும். இது தான் புத்திசாலித் தனம். தலைவர்களுடையசாமர்த்தியத்தினாலேயே அயர்லாந்து துருக்கி எகிப்து ருஷியா இவை முன்னேற்ற மடைந்தன என்பதை நரியன் தமது புத்தகத்தில் சொல்லியுள்ளார். அந்த வழியில் தான் நாமும் நமது லக்ஷியத்தை அடையலாம்.

#### துரோகமில்லை

தற்காலிகமாக ஒரு சமரஸத்திற்கு உடன்படுவது தேசத்திற்குத் துரோகம் செய்வதாகிவிடாது. லெனின் போன்ற பெரிய தலைவர்களும் அந்த வழியைப் பின்பற்றத்தான் வேண்டியிருந்தது. ஒரு படியில் தற்காலிகமாக திருப்தியடைந்துவிடுகிறவர்கள் உண்மைத் தேசாபிமானிகளென்றும், சுய காரியப்புலிகளென்றும் காங்கிரஸ் வாதிகளிலேயே சிலர் கருதுகின்றனர்; இந்தக் கோஷ்டியினர்தான் உத்தியோகம் ஏற்பது, பார்லிமெண்டரி ஒத்துழைப்பு முறையைக் கைக்கொள்ளுவது பெரும் பாவமென்று சாதனை செய்கின்றனர்; இவர்களே கவர்னருடன் விருந்துண்ணுவதும், கவர்ன்மெண்டு சம்பந்தமுள்ள விருந்துகளில் கலந்துகொள்ளுவதும் பிரஷ்டம் செய்வதற்குப் போதிய காரணங்களாகுமென்று சாற்றுகின்றனர். இந்தக் குறுகிய மனோபாவத்தால் அந்தாங்க சுதந்திரம் குறைந்து விட்டது. இதனாலேயே சட்டசபைகளில் புகுந்து, பதவிகளையேற்று, தேசத்திற்கு நன்மை செய்ய விரும்பும் தலைவர்களும் அரசியலைத் தகர்த்து விடுவதாகப் பேசவேண்டியிருக்கிறது. இத்தகைய பிசகுகளாலேயே தேசவேலைக்குத் தாமதமுண்டாகிறது. அபேதவாதிகள் புதிய அரசியல் அமுல் நடைபெறாமல் செய்துவிடுவதாகச் சொல்லுகிறார்கள். சாமர்த்தியத்தில சிறந்த தேசபந்துவும் தந்திரத்தில் சிறந்த யோதிலாலும் செய்யமுடியாததை இவர்களா செய்துவிடப் போகிறார்கள்?

புதிய அரசியல் அதிருப்திகரமானது தான். ஆனால் அது அனுஷ்டானத்திற்கு வரப்போகிறது. அதை மறந்து விடுவதில் காரியமில்லை. அந்தப்படிக்கு அதை உபயோகித்துக் கொள்ளுவது தான் புத்திசாலித்தனம். அயர்லாந்து அவ்விதம் செய்ததால் லாபமடைகிறது; எகிப்தும் அந்த வழியையே இப்பொழுது பின்பற்றி வருகிறது. இந்தியா இன்னும் மாயாவாதம் செய்து கொண்டிருக்கப் போகிறதா, அல்லது காரியத்தில் இறங்கப் போகிறதா?

## செய்தித்திரட்டு

### சென்னைக்குச் சுதேச கவர்ணர்

சென்னைக் கவர்ணராகிய லார்ட் எர்ஸ்கின் என்பவர் ஜூன்மீ 18-ந் திகதிமுதல் விடுமுறையை நான்கு மாதங்களுக்கு லீவு பெற்று இங்கிலாந்து செல்கின்றார். இவர் இங்கிலாந்திலிருந்து திரும்பும்வரை இவருக்குப் பதிலாக வேலை பார்த்தற்கு பொப்பிலியின் ராஜா ஸாஹிப் சர் குர்ம வெங்கட்டரெட்டி நாயுடு நியமிக்கப் பட்டுள்ளார்.

### காய்ச்சலைத் தடுக்கச் சட்டம்

இலங்கையில் நுளம்புகளால் மலேரியாக் காய்ச்சல் பரவாமல் தடுத்தற்காகவேண்டிய வழிவகைகளை ஏற்படுத்துவதற்காக ஓர் சட்டம் தயாரிக்கப்படுகின்றதாம். ஆகாயவிமானங்களால் கொண்டுவரப்படும் நுளம்புகளைத்தானும் தடுத்தற்குரிய வழிவகைகளையும் இச்சட்டம் கையாடுமாம்.

### இலங்கையில் சீன புத்த குருமார்

இலங்கைக்கு வந்து சேர்ந்துள்ள ஐந்து சீனப் புத்த குருமார்கள் நேற்று பம்பலப்பிட்டியில் வஜிராராமஎன்னும் புத்தாலயத்தில் பௌத்த மத சம்பிரதாயப்படி தீக்ஷை வைக்கப்பெற்றனர். இன்று இவர்கள் தலவாக்கலைக்குப் புறப்படுவார்கள். அங்கு இவர்களுக்கு இன்னும் உயர்ந்த தீக்ஷை செய்யப்படுமாம். இவர்கள் இலங்கையில் பத்து வருஷங்களுக்குத் தங்குவார்களாம.

### அபிஸீனியா மீது ஜவஹரின் அநுதாபம்

காங்கிரஸ் தலைவராகிய பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் தமக்கு அபிஸீனியாமக்கள்மீதுள்ள அநுதாபத்தைத் தெரிவித்து, அபிஸீனியா சம்பந்தமாக ஏகாதிபத்தியப் பித்துக் கொண்ட ஐரோப்பிய வல்லரசுகளின் நடவடிக்கைகளையும் சர்வதேசசங்கத்தின் ஆற்றலின்மையையும் கண்டித்து மேமாதம் 9-ந் திகதியை அபிஸீனியா தினமாகக் கொண்டாட வேண்டுமென்று ஒரு வேண்டுகோள் செய்திருக்கிறாராம்.

### பிளேக்நோய் மரணங்கள்

1934ம் ஆண்டைக் காட்டிலும் சென்றவருடம் பிளேக்நோயினால் இருபத்தேழுபேர் அதிகமாக மரணமடைந்தார்களாம். 1935ம் ஆண்டில் இலங்கையின் நாலுபக்கங்களிலும் 60 பேருக்கு நோய் கண்டது இதில், 57 பேர் கொழும்பு முனிசிப்பல் எல்லைக்குட்பட்டவர்கள். கொழும்புக்கு வெளியே நோய்கண்ட மற்றமூவருக்கும்கூடக்கொழும்பிலிருந்தே நோய் தொற்றியதாம்.

### ஸ்ரீமதி சரோஜினி துக்கம்.

ஹைதராபாத் மே 2உ

காலஞ்சென்ற எகிப்து மன்னரின் மரணத்தைக்குறித்து ஸ்ரீமதி சரோஜினிதேவி, தமது அநுதாபத்தைத் தெரிவிக்கையில் கூறியதாவது:-

தேச முன்னேற்றத்திற்காகப் பாடுபடுவதில் கிகாற்றவரான எகிப்தின் புவாத் மன்னரின் மரணம் என்னைத் திகைக்கிடச் செய்தது தமது தேச ஜனங்களிடையே அவர் தேசிய உணர்ச்சியை எழுப்பினர். எகிப்தியர்களிடையே, முஸ்லீம்கள் யூதர்கள் என்ற வேறுபாடில்லை எல்லோரும் எகிப்தியர்களே, என்று எகிப்து மக்களை ஒவ்வொருவரும் கருதுவதாக ஒரு எகிப்திய அதிகாரி கூறியிருப்பதே எகிப்து மன்னரின் தேசமுன்னேற்ற முயற்சியின் வெற்றிக்கு அறிகுறியாகும்.''

## உலகம் பலவிதம்

நீதிஸ்தலங்களில் சில சமையம் நியாயவாதிகளாயுள்ளார் விஞன கேள்வி கேட்க, கேட்கப்படும் வழக்காளி எதிரி சாட்சிகளாயுள்ளார் அந்தநியாயவாதிகட்குச் சுடச்சுட விடையிறுப்பதும் அதனைக் கேட்டு நீதிபதி ஏனைய வழக்கறிஞர் நீதிஸ்தலத்தில் இருப்போர் நிற்போர் எல்லாருஞ் சிரிப்பது முண்டு.

ஒரு கொலைவழக்கிற் சாட்சி சொல்லும்படிவந்த ஒரு பெண்ணை நியாயவாதி பார்த்து:

இந்தக் கொலை நடந்தபோது ஏன் அங்கே போனாய்?

சாட்சி: நான் கோயிலில்திருவிழாப் பார்க்கப் போயின்றேன்.

நியாயவாதி: திருவிழா நடக்கும் போதுதானே இக்கொலை நடந்தது? —ஓம்.

நி-வாதி: அன்றைக்கு என்ன திருவிழா?

சாட்சி: குதிரைவாகனத்திருவிழா;

நி-வாதி: திருவிழாவில் எத்தனை கூட்டம் மேளம் அன்று வந்து நின்றது?

சாட்சி: ஐயா, நான் சுவாமி கும்பிடப்போய் நின்றேனே யல்லாமல், எத்தனை கூட்டம் மேளம என்பதைக் கணக்குப் பார்க்கப் போகவில்லை.

நீதியரசர்: (நியாயவாதியைப் பார்த்து) இப்படியான கேள்விகளால் வரக்கூடிய நன்மையில்லை. வீண்நேரம் போக்காது வேண்டிய கேள்விகளைக்கேளும்.

நி-வாதி: ஆம். ஆண்டவனே, அப்படியே செய்கிறேன்.

* * *

வேறொரு கொலைவழக்கில் எதிரி பக்கத்து நியாயவாதி வழக்காளி பக்கத்துச் சாட்சியைப் பார்த்து:

இந்த எதிரி மண்வெட்டியினால் அவனுடைய விலாப்புறத்தில் அடித்தமையினாற்றான், அவன் செத்தான் என்று நிச்சயமாகச் சொல்லுகிறாயா?

சாட்சி: ஓம், நிச்சயமாகச் சொல்லுகிறேன்.

நி-வாதி: மண்வெட்டியினால்அடித்ததை நீ கண்ணாரக் கண்டாயா? பொய்சொல்லாதே; இதுஒருபாரதூரமான காரியம்; உன் சாட்சியத்திலே இந்த எதிரி கொலைத் தண்டனை யடையவும் கூடுமல்லவா?

சாட்சி: நான் பொய்சொல்லவில்லை. இவ்வெதிரி அவனுடைய விலாப்புறத்தில் மண்வெட்டியினால் அடிக்க நான் நேரிற்கண்டேன்.

நி-வாதி: சரி, மண்வெட்டிப் பிடங்கினால் அடித்தானா? இல்லையேல் பிடியினால் அடித்தானா?

(பிடங்கென்பது பிடியில் மண்வெட்டியும் வளையங்களும் மாட்டப்பட்டிருக்கும் அடிப்பக்கம்)

சாட்சி: பிடங்கினால் அடிக்கவில்லை. பிடியினாற்றான் அடித்தான்.

நி-வாதி: ஆம், நீ சொல்வது மெத்தச் சரி, நீ உண்மையே சொல்லுகிறாய்; இப்படிப்பட்ட பாரதூரமான வழக்கில் உண்மையைத் தான் சொல்லவேண்டும்; நான் உன்னை மெச்சுகிறேன். அது கிடக்க, மண்வெட்டிப் பிடங்கினால் அடிக்கும் அடி அபாயகரமானதா? இல்லையேல் பிடி நுனியினால் அடிக்கும் அடி அபாயகரமானதா?

சாட்சி: பிடங்கினால் அடிக்கும் அடி தான் அதிகம்அபாயகரமானது?

நி-வாதி: முழுவதுஞ் சரி; இந்த எதிரி அவனைக் கொல்லவேண்டுமென்ற நோக்கத்தோடு அடித்தானென்றால் பிடங்குள்ள பக்கத்தினால் அடியாமல் மண்வெட்டிப்பிடியின் நுனிப் பக்கத்தால் அடித்திருக்க மாட்டானல்லவா?

சாட்சி: எதிரியின் நோக்கத்தை நான் அறியேன்; எதிரி அடித்தது பிடியினாலேதான், ஐயா.

நி-வாதி: கொலைசெய்ய எண்ணங்கொண்ட எதிரி பிடங்கிருக்கப் பிடியினால் ஏன் அடித்தான்?

கேட்டதற்கு மறுமொழி சொல்லு.

சாட்சி: பிடங்கிருக்கப் பிடியினால் ஏன் அடித்தாய் என்று எதிரியையல்லவா கேட்க வேண்டும்; எதிரியைத்தான் கேளுங்கள்.

இம் மறுமொழியைக் கேட்டு நியாயவாதி விழிக்க, நீதிஸ்தலத்திலுள்ளோர் அனைவரும் புன்னகை செய்தனர்.

* * *

பொலிஸ் நீதிஸ்தலத்தில் நடந்த விசாரணையொன்றில் ஒரு நியாயவாதி எதிரியாகவுள்ள ஒருவனை நோக்கி: நீ யாரைக் கல்யாணஞ் செய்தாய்?

எதிரி: ஒரு பெண்ணைத்தான் கல்யாணஞ் செய்தேன், ஐயா.

நி-வாதி: (சினத்துடன்) ஏ, பேய்த்தனமான மறுமொழி சொல்லாதே; பெண்ணை யல்லாமல் யாரும் ஆணைக் கல்யாணஞ் செய்வதுண்டா?

சாட்சி: ஆம், ஐயா, உண்டு.

நி-வாதி: யார் அப்படிச் செய்தது? சொல்லு?

சாட்சி: என் தங்கைச்சி யொருத்தி ஆணாய்ப்பிறந்தவ னொருவனைத் தான் கல்யாணம் முடித்திருக்கிறாள்.

நீதிஸ்தலத்தில் நீதிவான் உட்பட எல்லாரும் பெருஞ் சிரிப்புச் சிரித்தனர்.

* * *

கொழும்பிலுள்ள கொம்பனித் தெரு என்று வழங்குமிடத்திற்கு ஆங்கிலத்திலே "ஸிலேவ் அயிலன்ட்" என்று பெயர். இந்த ஆங்கிலப் பெயரின் கருத்து "அடிமைத் தீவு" என்பதாம். பறங்கியர் ஒல்லாந்தர் இலங்கையின் கரைநாடுகளைப் பரிபாலித்த காலங்களிலே குறித்ததீவில் அடிமை வியாபாரம் நடந்ததென்பது ஐதிகம். அடிமைத்தீவென்னுங் கருத்தமைந்த ஆங்கிலப் பெயரை மாற்றி விடுதல் வேண்டுமென்று பலரும், பழைய காரணப் பெயர்களைக் காரணமின்றிக் கண்டபடி மாற்றவொண்ணாது என்றுசிலரும், இப்பொழுதுவாதாடுகின்றனரென்பதைப் பத்திரிகைகள் வாயிலாகக் காணலாகும். இது இவ்வளவில் நிற்க இந்தச் சந்தர்ப்பத்தில் இற்றைக்குச் சில வருடங்கட்கு முன் நடந்த ஒருசம்பாஷணை ஞாபகத்தில் வருகின்றது. இந்திய தேசாபிமானி யொருவர் சென்ற 1933 ம் ஆண்டிற் கொழும்புக்கு வந்து வெள்ளவத்தையிற் சிலகாலம் வசித்து வந்தார். ஒரு ஞாயிற்றுக் கிழமை பின்னேரம் மேற்படி இந்திய தேசாபிமானியும் கொழும்பில் உத்தியோகார்த்தமாக வசிக்கும் யாழ்ப்பாண வாலிபர் சிலரும் வெள்ளவத்தையிலிருந்து புகைரத மார்க்கமாகக் கொழும்புப் பட்டினத்திற்குப் பிரயாணஞ் செய்தனர். இந்த வியாசத்தை இப்பொழுது எழுதும் முருகேசுவும் கருமார்த்தமாக வெள்ளவத்தையிலே போய்த் தங்கி நின்றவர். அவர்களுடன் கூடிக் கொண்டு போனார். பிரயாணஞ் செய்தஇந்திய தேசாபிமானி வெள்ளவத்தைக்குங்கொழும்புக் கோட்டைக்கு மிடையேயுள்ள ஒவ்வொரு தானத்திலும் புகைரதம் தங்கி நிற்கும்போது "இந்தத் தானத்தின் பெயர் என்ன" என்று அவ்வப்போது வினவிவர, பக்கலில் இருந்தோர் அவைகளின் பெயரைச் சொல்லிக்கொண்டு வந்தனர். ஸிலேவயிலன்டுத் தானத்திற் புகைரதம் தங்கிய போதும் அவர் "இந்தத் தானத்தின் பெயர் என்ன" என்று வினவினர் "ஸிலேவ் அயிலன்ட்" என்று அவர்கள் பதில் சொன்னார்கள். அதற்கு அவர் நான் அறிந்த வரையில் உங்கள் இலங்கைத் தீவு முழுவதும் ஸிலேவ் அயிலன்டாக, அதாவது அடிமைத் தீவாக இருக்க, இந்த ஒரு இடத்திற்கு மாத்திரம் "ஸிலேவ் அயிலன்ட்" (அடிமைத்தீவு) என்று பெயரிட்டிருப்பதன் காரணமென்ன வென்று புன்னகையுடன் கேட்டார். பக்கத்திலிருந்தோர் அத்தனை பேரும் அவருடையகேள்விக்குப் பதில் சொல்ல வகையறியாது தயங்கினர்.

# Nethrananda Thailaya

**Ceylon's Premier Curative Medicine Oil.**

## நேத்திரானந்த தைலம்.

இலங்கையில் மிகவும் சித்திபெற்ற மருந்து எண்ணெய்களில் இதுவேமுதல்தரம்.

6 அவுன்ஸ் போத்தல் விலை ரூபா 2-50.
தபாற்கூலி 45 சதம்.



இது சிரசில் உண்டாகும் மண்டையிடியை ஐந்து நிமிஷத்திற்குள் நீக்குவதோடு கண்ணில் உண்டாகும் சகல எரிச்சல், மங்கலான பார்வை, நீர்வடிதல், சதைபடர்வு, என்னும் சகல கண்வியாதிகளையும், தலைமயிர் உதிர்தல், தலை மொட்டை, தலை கரை, பீனிசம் என்பவைகளையும் போக்கி தலைமயிரை நீளமாய் வளரச்செய்து பளபளப்பையும் கொடுக்கிறது. இதை உபயோகித்தால் கண்ணாடி போடத் தேவையில்லை. சிறியோரும் பெரியோரும் வயது வித்தியாசமின்றி உபயோகித்து வேண்டிய வேண்டிய சுகம் பெறக்கூடும்.

இலங்கையிலுள்ள கனவான்களாகியபெரிய உத்தியோகஸ்தர்களும், வியாபாரிகளும், சீமான் சீமாட்டிகளுமான யாவரும் அச்சமின்றி உபயோகித்து இதன் அரிய குணத்தைக் கண்டிருக்கிறார்கள், வெளிவந்திருக்கும் ஏனைய போலித்தைலங்களைப்போல் இதை நினையாமல் உடனே வாங்கி உபயோகியுங்கள்.

மனிதர் முக்கியமாகத் தெரிந்துகொள்வதும், மாதர் அதிகமாக விரும்புவதும் 35 வருஷங்களாக யாவராலும் அதிகமாகப் புகழப்படுவதும்

இந்த நேத்திரானந்த தைலமே.

இச்சச் சிறந்த எண்ணெய்க்கு நீண்ட பெயர் உண்டு என்று வார்த்தைசிரிகிற ஒவ்வொரு சிறபிள்ளைக்கும் தெரியும். சிரசில் ஏற்படுவதான தலை மயக்கம், கண் எரிவு, தலைவலி, இள கரை, தலைவழுக்கை, தலைமயிர் உதிர்தல் முதலிய எந்த வியாதிக்கும் இது ஏற்ற நிவாரணி என்று பலரும் அறிந்து உத்தரவாதம் செய்யப்பட்டது. நேத்திரானந்த தைலத்தினால் யாவும் சுகமாக்கப்படுகிறது. இது தற்காலத்தில் செய்யப்படும் போலித் தைலத்தைப் போலல்ல இலங்கையிலும் பிறதேசங்களிலும் நன்கு பரீட்சிக்கப்பட்டுள்ளது.

தலைமை ஸ்தானம்:—
வைத்தியசேகர முதலியார்,
டப்ளியு. டானியல் பெர்னாண்டோ,
ஸ்ரீவேத வளவும், பாணதுறை.

கிளை ஸ்தானம்:—
பௌத்தமந்திர வைத்தியசாலை.
நோரிஸ்ரோட், கொழும்பு—இலங்கை
காவில் ஹோட்டல், கண்டி.

தந்தி விலாசம்:—வேத முதலியார் பாணதுறை.

(H 332. 20-3-36 to 19-9-36)



## கொய்லன் வங்கி
## (லிமிற்றெட்)

(1919-ம் ஆண்டு திருவாங்கூரிற் பதிவுசெய்யப்பட்டது)

## யாழ்ப்பாணம்.

காலங் குறிக்கப்பட்ட வைப்புப்பணம்
( FIXED DEPOSITS )

எங்கள் வங்கியில் க்ஷேமிக்கும்படி தரப்படும் வைப்புப்பணத்திற்குப் பின்வரும் விகிதமான வட்டி கொடுக்க நிர்ணயஞ் செய்திருக்கிறோம்.

| | |
|---|---|
| 6 மாச காலம் | $3\frac{1}{2}$ விகிதம் |
| 12 மாச காலம் | $4\frac{1}{2}$ விகிதம் |
| 24 மாச காலம் | 5 விகிதம் |

ஏனைய விபரங்களை எங்களிடம் விஞவியறிந்துகொள்ளலாம்.

**V. C. ஓமன் B. A.**
யாழ்ப்பாண ஏஜன்ற்

Y. 71 23-5 to. 22-5-36



## திருநெல்வேலி ஒற்றுமை நிதி,
( வரைவுளது )

அதிகாரம் பெற்ற மூலதனம் ரூபா **500,000.**
ஒன்ற 25சதமாக 80 மாதங்கள் செலுத்திருபா 25ம் ஆதாயமும்பெறலாம்

தனிகத்தொழிலும் உணவுப்பொருள் வியாபாரமும் திருநெல்வேலியில் இலாபகரமாய் நடக்கின்றன.
வேண்டிய இடங்களில் கிளை ஸ்தாபனங்கள் திறக்கப்பெறும்.
தேசிய கழகங்களை வளர்ப்பதால் சுயேச்சைபெற முடியும். ஆதலால், முதலை வளர்த்து வேலை யளித்து, கைத்தொழிலை உயிர்ப்பிக்கும் நோக்கங்கொண்ட இந்நிதியை ஆதரியுங்கள்!
இலகுவான முறையில் இறக்கூடிய கடன்கள் கொடுக்கிறோம்.
உயர்ந்த வட்டி விகிதங்களோடு தவணைக்கும் நிபந்தமாயும், சம் பாத்தியத்திலும், நடைக்கணக்கிலும் பணம் ஏற்றுக்கொள்ளேசம்.
பங்குகளுக்கு முந்துங்கள்!!
கைராட்டினத்தில் நூற்ற நூலும், கைத்தொழில் பொருளும் சந்தாவுக்கு ஏற்றுக்கொள்ளுவோம்.

வ. சோமசுந்தரம்,
காரியாதிகாரி.

(Y. 189. 1 11-35 to 31-10 36.)



## சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பலவியாதிகளைக் குணப்படுத்துவதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலக நன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனல் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனாலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்போது இந்த லேகியத்தைப் பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, அலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பிதாரு, சாலா மூஸ்லி, சப்பேமுத்லிலி பிஸ்தாஸ், சார்ப்பருப்பு, பாதப்பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளி விதை, நாகப்பூ, வங்கபஸ்பம், அரசு பஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்தசெந்தூரம், சாம்பிராணிபதங்கம் இன்னும், அநேகபுஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்திற்குள் உண்டாயிருக்கும் பக்கவாயு, இருமல், காசம், பித்தகாமாலை, பித்த பாண்டு, பீனிசம், கைகால் நாந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாயு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் நீருப்ஸ்திரீகள் இந்தலேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் குணமடைவதுடன் சூதகவாய்வு, பிரசவஅறையில் உண்டாகும் நோய்கள்தீர்ந்து தேகபுஷ்டியும்பலமும் பெறுவார்கள். பால்விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை ருத்தல் ஒன்றுக்கு ரூபா உ0. அரை ருத்தலுக்கு ரூபா பத்து. கால் ருத்தலுக்கு ரூபா ரு. தபாற்செலவு பிரத்தியேகம்.
சிங்கப்பூர்பினுக்கு முதலிய தொடுவாயிராச்சியப் பகுதிக்கு வி. பி. சட்டம் இல்லாததனால் முன் மனிஆடர் அனுப்புதல்வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை,
சிவஞான ஆரோக்கிய சுகாதார வைத்தியசாலை.
காத்தான்குடி போஸ்டு,
மட்டக்களப்பு,

Y55 1-1-34 to 31-12-36) இலோன்.



வண்ணைநகர்

தையல்நாயகி
கலிவெண்பா
திருவூஞ்சல்
முத்துக்குமாரசுவாமி
திருவூஞ்சல்,

இவை இப்பொழுது தெளிவாக அச்சிடப்பெற்று ஓரே பிரதியாக வெளிவந்துள்ளன.

விலை சதம் 5.

மானேஜர்,
சைவப்பிரகாசயந்திரசாலை.
வண்ணார்பண்ணை.


## விளம்பரவிகிதம்.

வியாபாரத்தை விருத்தி, செய்யவேண்டில் இந்துசாதனப் பிரசுரங்களில் விளம்பரஞ் செய்க.

| | | | |
|---|---|---|---|
| 1 பந்தி | (கலம்) | ரூபா | 10-00 |
| $\frac{1}{2}$ ,, | ,, | ,, | 5-50 |
| $\frac{1}{4}$ ,, | ,, | ,, | 3-00 |
| 1 அங்குலம் | | ,, | 1-00 |

அடுத்த பிரசுரங்களிற் பாதி விகிதம்.

காலம் நீடித்த விளம்பரங்கள், விசேஷ விளம்பரங்கள் விஷயத்தில் மனேஜரிடம் நேரிற் கண்டேனும் எழுத்துமூலமாகவேனும் ஒழுங்கு செய்யலாகும். உடன்பணம் அனுப்பப்படா விளம்பரங்கள் ஏற்கப்படமாட்டா.

மானேஜர்
சைவப்பிரகாசயந்திரசாலை


"இரதிமன்மத"
## சுகானந்த லேகியம்.

க்ஷயம் - ஸ்வாஸகாஸம் - மேகம் - குன்மம் முதலிய கொடூரமான வியாதிகளையும், வீரியஅழிவு, மலபந்தம், அஜீர்ணம், சரீரமெலிவு, மூலஎரிச்சல் முதலிய சர்வவியாதிகளையும் போக்கி, இரத்தத்தை விருத்திப்படுத்தி, ஆண்மையூட்டி கிழவர்களுக்கும் கூட யௌவனத்தை உண்டுபண்ணிச் சுகமனுபவிக்கச்செய்வதில், இதற்கு நிகரான "சித்த" ஔஷதம் வேறுகிடையாது:—

ஓர் முறை பரீக்ஷியுங்கள்.

பூரணசுகத்திற்குப் போதுமான 40 நாட்கள் சாப்பிடக்கூடிய ஔஷதத்தின் விலை ரூபா } 4 0
தபால்சார்ஜ வேறு.

N. B. முழுவிவரங்களடங்கிய "ஔஷத பூஷணம்" வேண்டுபவர்களுக்கு இனமாக அனுப்பப்படும்.

விலாசம்:—
மலையாள "சித்த" ஔஷதாஸ்ரமம்,
2 மெயின்ரோட்,
கோல்லம், **Quilon S. India.**

H 208. 1-12-35 to 31-5 36


படுபயன் வெஃகிப் பழிப்படுவசெய்யார்
நடுவன்மை நாணுபவர்.


## விட்டில்ஸ் ஓரியண்டல்பாம்.

எல்லா வலிப்புகளுக்கும் நோவுகளுக்கும்
பாரதநாட்டின்
முதன்மையானதும் சிறந்ததுமான
திவ்விய ஔஷதம்.
மிருகக் கொழுப்பு
கலக்கப்படவில்லை என்பதற்கு
உத்தரவாதம்.

Y 53 1-1—31-12-36)


"ஒழுக்க முடைய குடிமை யிழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்."

## பத்திரக் கிரயம்.

( முற்பணமாக அனுப்புதல் வேண்டும். )

| யாழ்ப்பாணப் பட்டினம் | தமிழ் | ஆங்கிலம் | இருபிரதிகளும் |
|---|---|---|---|
| | ரு. ச. | ரு. ச. | ரு. ச. |
| (கூரசங்க எல்லைக்குட்பட) | | | |
| ஒருவருடத்திற்கு | 5 - 00 | 5 - 00 | 9 - 00 |
| $\frac{1}{2}$ வருடத்திற்கு | 3 - 00 | 3 - 00 | 5 - 00 |
| $\frac{1}{4}$ வருடத்திற்கு | 2 - 00 | 2 - 00 | 3 - 75 |
| இலங்கை இந்தியா | | | |
| ஒருவருடத்திற்கு | 8 - 00 | 8 - 00 | 12 - 00 |
| $\frac{1}{2}$ வருடத்திற்கு | 4 - 50 | 4 - 50 | 7 - 00 |
| $\frac{1}{4}$ வருடத்திற்கு | 2 - 50 | 2 - 50 | 4 - 50 |
| சிங்கப்பூர் முதலிய அந்நிய நாடுகள் | | | |
| ஒருவருடத்திற்கு | 9 - 00 | 9 - 00 | 13 - 00 |
| $\frac{1}{2}$ வருடத்திற்கு | 5 - 00 | 5 - 00 | 7 - 50 |
| $\frac{1}{4}$ வருடத்திற்கு | 3 - 00 | 3 - 00 | 5 - 00 |

தனிப்பிரதி சதம் 5

கொழும்பு தனிப்பிரதிநிதி:-

ப. மு. ரா. முத்துச்சாமி ரெட்டியார்,
"நியூஸ்மார்ட்"
89. கோவில்தெரு,
கும்பனித்தெரு.

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by S. ADCHALINGAM, residing at Vannarponnai West Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai, Jaffna at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Thursday, 7th May 1936.